Registered as a News paper in Sri Lanka
விலை ரூபா: 10.00

# வலம்புரி
Valampurii


பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | கார்த்திகை 27 | திங்கட்கிழமை (12.12.2005) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 358

ராம்கோ
ஆசியாவின் அதிநவீன முதலாவதாகும் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமெந்து

# சமாதானப் பேச்சை ஜப்பானில் நடத்தலாம்

## சிறப்புத்தூதுவர் அகாஷி தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சு வார்த்தைகளை ஆசிய நாடொன்றில் நடாத்த இலங்கையரசு விரும்புகின்றது. இதற்கமைவாக சமாதானப் பேச்சுக்களை ஜப்பானில் நடாத்த தமது நாட்டு அரசு தயாராகவிருப்பதாக இலங்கைக்கான ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி தெரிவித்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி.உறுப்பினர் திருமலையில் சுட்டுக்கொலை

திருகோணமலை அலஸ்தோட்டம் அகதி முகாமை அண்மித்த பகுதியில் நேற்று மாலை இனந்தெரியாத நபர்களினால் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

மாலை 6மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர் எஸ்.கொலின் (வயது 35)என அடையாளம் காணப்பட்டுள்ளார்.இவர் ஈ.பி.டி.பியின் உறுப்பினர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். தில்லை நகரிலுள்ள தனது வீட்டிலிருந்து ஈ.பி.டி.பி. அலுவலகத்திற்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த சமயம் மோட்டார் சைக்கிளில் வந்த நபர்களினால் இவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். (ந-4)

## தோப்பூரில் முஸ்லிம் விவசாயி சுட்டுக்கொலை-இருவர் காயம்

### பதற்றத்தை தணிக்க முயற்சி

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டம் மூதூர் தோப்பூர் பகுதியில் வைத்து முஸ்லிம் விவசாயி ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இச்சம்பவத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

நேற்றுக்காலை 8.15மணியளவில் தோப்பூரில் வயல்வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த முஹமட் ராவிக் (வயது-37) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இதனையடுத்து அப்பகுதியில். பெரும் பதற்றநிலை உருவானது. இப் பதற்றத்தை தணிக்கும் முயற்சியாக அப்பகுதிக்குச் சென்ற திருகோணமலை மாவட்ட யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் ஆர்தர், உறுப்பினர் யூலியன் மற்றும் பொலிஸ் இராணுவ அதிகாரிகள் தோப்பூர் பொலிஸ் நிலையத்தல் வைத்து நிலைமையை சுமுகமாக்கும் வகையில் முஸ்லிம் பிரமுகர்களுடன்சமரசப்பேச்சுவார்த்தைகளை நடாத்தியுள்ளனர்.இச் சம்பவம் தொடர்பாக இன்று விடுதலைப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா வைத்தியசாலையில் திகில்

## காவலுக்கு நின்ற பொலிஸ் மீது சூடு சிகிச்சை பெற்ற பெண் ஒருவர் மீட்பு

(வவுனியா)

வவுனியா வைத்தியசாலையில் பொலிஸ் பாதுகாப்பில் சிகிச்சை பெற்று வந்த பெண் ஒருவரை, ஆயுதம் தாங்கிய குழுவினர் காவலுக்கு இருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை சுட்டுக்கொன்று விட்டு மீட்டுச்சென்றுள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் 2-35 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர். மன்னார் பள்ளிமுனைக் கடற்பரப்பில் கடந்த செவ்வாய்க் கிழமை கடற்படையினரால் சுற்றி வளைக்கப்பட்டபடகில் வைத்து சயனற் அருந்திய நிலையில் சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த குணரட்ணம் புவனேஸ்வரி என்பவரே இவ்வாறு மீட்டுச்செல்லப்பட்டுள்ளார்.

வைத்தியசாலையின் பெண் நோயாளர் விடுதியில் பின்பக்கமாக மூவர் வந்ததாகவும் அதில் ஒருவர் முன்வாசலில் காவலுக்கு நின்ற மகேஸ் ரணசிங்க என்ற பொலிஸ் கான்ஸ்டபிளை துப்பாக்கியால் சுட்டுக்கொன்று விட்டு பிரஸ்தாபப் பெண்ணை மீட்டுச்சென்றுள்ளதாகவும் வவுனியா (12 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தநிறுத்த உடன்படிக்கையை அரசின் பங்காளிகள் ஏற்கவேண்டும்

### பேச்சைத் தொடர முன் நோர்வே நிபந்தனை

(கொழும்பு)

நோர்வே தனது சமாதானப் பணிகளில் காத்திரமான பங்கினை வகிக்க வேண்டுமாயின் போர் நிறுத்த ஒப்பந்தம் தொடர்பான உடன்பாட்டை ஜனாதிபதி ராஜபக்ஷவின் அரசாங்கம் தனது பங்காளி கட்சிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளவேண்டும் என்று நோர்வே அனுசரணையாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இத்தகையதொரு உறுதி மொழியைபெறும் பொருட்டு விரைவில் நோர்வேயின் உயர்மட்ட தூதுக் குழுவொன்று இலங்கை வரவுள்ளது.

இந்த நடைமுறைகளின் பின்னரே இருதரப்பு பேச்சுக்கள் தொடர்பிலான அனுசரணை பணிகள் ஆரம்பமாகும். இவ்விடயம் கிளிநொச்சியில் நோர்வேயின் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரும் தமிழ்ச்செல்வனும் நடத்திய பேச்சுக்களின் போது குறிப்பிட்டப்பட்டிருந்தன.

இதேவேளை ஸ்கன்டிநேவிய நாடுகளின் தலைமையிலான போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவிற்கு பதிலாக சார்க் நாடுகளின் பிரதிநிதிகளைக் கொண்ட அணியொன்றினையோ அன்றி மிதவாதப்போக்குடனான ஐரோப்பிய நாடுகளின் அணியொன்றினையோ ஈடுபடுத்துவதுபற்றி அரசாங்கம் ஆலோசித்து வருவதாக உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இன்றைய கண்காணிப்பு குழுவை இடைநிறுத்திவிட்டு புதிய குழுவொன்றை அமர்த்தும் முன்னெடுப்பு அரசின் கூட்டணிக் கட்சிகளான ஜே.வி.பி.மற்றும் ஹெல உறுமய (12 ஆம் பக்கம் பார்க்க)


## அருட்கவி விநாசித்தம்பி சமாதி அடைந்தார்

(யாழ்ப்பாணம்)

சைவத்தமிழ்ப்புரவலரும் தலைசிறந்த பிரசங்க வித்தகரும் அருள் வாக்கு ஞானியுமான அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர் அவர்கள் நேற்று அதிகாலை சிவனருட்பேறு பெற்று சமாதி அடைந்தார்.

அளவெட்டியூர் நாகவரத நாராயணன் ஆலய ஸ்தாபகரும் அகில இலங்கை இந்துப் பேரவையின் தலைவருமான அருட்கவி விநாசித்தம்பி அவர்கள் சைவப்பிரசங்கத்தினூடாகவும் அருள்வாக்கினாலும் மக்களை ஆற்றுப்படுத்தியவர்.

1923 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 03ஆம் திகதி மக நட்சத்திரத்தில் பிறந்த அவர்கள் 1945 இல் ஆசிரியப் பணியை ஆரம்பித்தார்.



சித்த வைத்தியத்திலும் ஆன்மீகப்பரப்புரையிலும் தன்னை அர்ப் (12 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 077-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## யப்பான் நாட்டின் சிறப்புத் தூதுவர்

# யசூசி அகாஷி அம்பாறையில் மூவினப் பிரதிநிதிகளுடன் சந்திப்பு

(அம்பாறை)

ஜப்பான் நாட்டின் சிறப்புத் தூதுவர் யசூசி அகாசி கடந்த வெள்ளிக்கிழமை அம்பாறை மாவட்டத்திற்கு பயணம் செய்து தமிழ், முஸ்லிம், சிங்கள இனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளைத் தனித்தனியே சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.



அன்றைய தினம் காலை 10.00 மணிக்கு அம்பாறை மாவட்டத்திற்கு வருகை தந்த இவர் முதலில் கல்முனை சாஹிராக் கல்லூரி மண்டபத்தில் முஸ்லிம் பிரதிநிதிகளை சந்தித்து அவர்களின் கருத்துக்களை தெரிந்து கொண்டதையடுத்து அவர்கள் மத்தியில் உரையாற்றியுள்ளார்.

மருத்துவர் ஜமீல் தலைமையில் நடைபெற்ற இச் சந்திப்பின் போது அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல் தலைவர் மௌலவி ஹனீபா, மௌலவி இப்றாஹிம் தலைமையிலான ஜெம்மிலத்துல் உலாமா உறுப்பினர்கள், முஸ்லிம் சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் அபுல் கலாம், பிரதேச இணைப்பாளர்களான மௌலவிமார்கள, சமாதான பிரதிநிதிகள் எனப்பலர் கலந்து கொண்டனர்.



இதனையடுத்து பிற்பகல் 1.00மணிக்கு கல்ஓயாவின் வாடி வீட்டில் சிங்கள சமூகத்தை கிரிந்தவெல சோமரெத்தன ஹிமி தலைமையில் 10பேர் கொண்ட குழுவினை சந்தித்து உரையாற்றினார்.

பின்னர் 2.30மணியளவில் தமிழர்கள் தரப்பில் உதவிக் கலவிப் பணிப்பாளர் சகாதேவா தலைமையில் 6பேர் கொண்ட குழுவினரின் கருத்துக்களை பரிமாறிக் கொண்டு 3.30 மணியளவில சந்திப்பு முடிவடைந்தது. (த)

# சுகாதார அதிகாரிகள் அறிவுறுத்து

(கொழும்பு)

நாட்டில் வயிற்றோட்டதால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய்ப்பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த சில வாரங்களாக பெய்துவரும் கடும் மழையை அடுதது இந்நிலை தோன்றியுள்ளது. கடந்த மாதம் 26ஆம் திகதி முதல் இதுவரை வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்ட 103பேர் இனம் காணப்பட்டுள்ளனர்.

காய்கறிவகைகள் மற்றும் பழவகைகள் ஆகியவற்றை உணவுக்காக சேர்த்துக்கொள்ளுமபோது கூடிய கவனம் செலுத்துமாறும், கொதித்தாறிய நீரை குடிநீராகப் பயன்படுத்துமாறும் சுகாதார அதிகாரிகள் ஆலோசனை வழங்கியுள்ளார்கள்.

இதேவேளை, டெங்குக் காய்சசலால் பீடிக்கப் பட்ட 8 பேரும், எலிக்காய்ச்சலால் பீடிக்கப் பட்ட 3 பேரும் இனம் காணபபட்டுளள தாக சுகாதார அமைச்சு மேலும தெரிவித்துள்ளது. (த-9)

# சர்வதேச தேயிலைத் தினம் டிசம்பர் 15 இல் பிரகடனம்!

(கொழும்பு)

புதுடில்லியில் நடைபெறவிருக்கும் சர்வதேச தேயிலை மாநாட்டில் டிசம்பர் மாதம் 15 ஆம் திகதியை சர்வதேச தேயிலை தினமாகப் பிரகடனம் செய்வதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாளையும் நாளை மறு தினமும் நடைபெறவிருக்கும் இந்த மாநாட்டில் இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், நேபாளம், கென்யா, சீனா ஆகிய நாடுகளை சேர்ந்த அமைச்சர்கள் தொழிற்சங்கவாதிகள், சிறு தேயிலை தோட்ட பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தேயிலை வர்ததகத்தில் உலக மயமாக்கலால் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து இந்த மாநாட்டில் ஆராயப்படும்.

தேயிலை தோட்ட தொழிலாளர்கள் மற்றும் சிறுதேயிலை தோட்ட உரிமையாளர்கள் ஆகியோரது உரிமைகள் பற்றியும் இந்த மாநாட்டில் ஆராயப் படும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் 10 லட்சத்திற்கும் அதிகமான தொழிலாளர்களும் அவர்களது குடும்ப உறுப்பினர்களும் தேயிலை உற்பத்தி தொழில் செய்வதிலேயே தங்கியுள்ளனர்.

(த-7)

# கள்ளச் சாராயம் அருந்தி 12 பேர் உயிரிழப்பு

(மாத்தறை)

மாத்தறை பிரதேசத்தில் கள்ளச் சாராயம் அருந்தியதால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 12 ஆக அதிகரித்துள்ளது.

கள்ளச் சாராயம் அருந்தி வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ள மற்றும் ஒருவர் நேற்று முன்தினம் இரவு உயிரிழந்ததாக வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்தார்.

கள்ளச் சாராயம் அருந்தியதால் பாதிக்கப்பட்ட மேலும் 8 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது வரை 65 பேர் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருவதாகவும் இவர்களில் பெரும்பாலானவருக்கு கண் பார்வை பாதிக்கப்பட்டுள்ள தாகவும் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கள்ளச் சாராயம் விற்பனை செய்த பெண் ஒருவரை கைது செய்துள்ளதாக மாத்தறை உதவி பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார். (த-9)

# இராசி பலன்

**12. 12. 2005**

**(கார்த்திகை27, திங்கட்கிழமை)**
**துவாதசி முன்னிரவு 10. 41மணிவரை**
**அச்சுவினி முற்பகல் 9. 39மணிவரை**
**இராகுகாலம்7. 50-9. 20 மணிவரை**
**சுபநேரம்12. 20-1. 50 மணிவரை**
**4ஆம் கார்த்திகை சோம வாரம்**

| | |
|---|---|
| மேடம் | கற்பனை மிகுதி, நல்ல முயற்சி, போசன சுகம், நண்பர்கள் சந்திப்பு. |
| இடபம் | காரிய அலைச்சல், பிரயாணம், சுப செலவு, உறவினர் மனஸ்தாபம். |
| மிதுனம் | எடுத்த காரியம் கைகூடும், நண்பர்கள் சந்திப்பு, விருந்துபசாரம், மனஸ்தாபம். |
| கடகம் | அதிகாரம், நல்ல முயற்சி, உறவினர் சந்திப்பு, உற்சாகம். |
| சிங்கம் | புதிய திட்டமிடல், சரீரப்பிரயாசை, கட்டுப்பாடு, முயற்சி தாமதம். |
| கன்னி | அபகீர்த்தி, ஆரோக்கியக் குறைவு, காரிய தாமதம், பணக்குறைவு. |
| துலாம் | களஷ்திர நன்மை, காரிய சித்தி, நண்பர்கள் உதவி, விருந்துபசாரம். |
| விருச்சிகம் | தேக நலன், தடைப்பட்ட காரியம் கைகூடும், சுப நிகழ்வு, பகைவர் நேசம். |
| தனுசு | வியாபார நன்மை, அதிக செலவு, முயற்சி தாமதம், பூர்வ புண்ணிய கருமம். |
| மகரம் | மாதா சுகம், சுப செலவு, காரிய தாமதம், உறவினர் வருகை. |
| கும்பம் | கூட்டு முயற்சி, அந்நியர் சந்திப்பு, பிரயாண நன்மை, பொருள் சேர்க்கை. |
| மீனம் | உணர்ச்சி வசப்படல், பணவிரயம், காரிய தாமதம், போசன சுகக்குறைவு. |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**
\- வளவன்

# மாகாண சபைகளுக்கு அதிகாரங்களும் பொறுப்புகளும்

மாகாண சபைகளுக்கு அதிகாரங்களும் பொறுப்புகளும் வழங்கப்படுவதன் அவசியம் பற்றி வலியுறுத்திய வடக்கு-கிழக்கு மாகாண் ஆளுநர் டிரோன பெர்னாண்டோ மாகாணசபை தமது அதிகாரங்களையும் மக்கள் மேம்பாட்டுக்காகப் பொறுப்புடன பயன்படுத்த வேண்டும் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சுபாரதி நிகழ்ச்சியில் நேற்றுக்காலை கலந்துகொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார். இந்த நடைமுறையில் விடுதலைப்புலிகள் அடங்கலாகச் சகல தரப்பினரும் உள்வாங்கப்படவேண்டும் எனவும் ஆளுநர் யோசனை தெரிவித்தார்.

மேல்மாகாண சபை உறுப்பினர் ஹெக்டர் லொக்குகே நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அரசியல் யாப்பில் அளிக்கப்பட்ட சில அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு அளிக்கப்படவில்லையென குற்றம் சாட்டினார். (த)

# திருத்தப்படாத வீதி; பயணிப்பதில் சிரமம்

(பொன்னாலை)

பருத்தித்துறை-கற்கோவளம் கடற்கரை வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாது இருந்துவருகின்றது. இதனால் அப்பகுதி மக்கள் பெரிதும் சிரமம் அடைந்துவருகின்றனர்.

இந்தக் கடற்கரை வீதி ஆழிப்பேரலை இடம் பெறுவதற்கு முன்னரே குன்றும், குழியுமாக காட்சியளித்தது. பின்னர் ஆழிப்பேரலை அனர்த்தம், தொட்டுப பருவகால மழை ஆகியவற்றால்பெரிதும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றது.

பாடசாலை மாணவர்கள், கடற்றொழிலாளர்கள், உத்தியோகத்தர், பொதுமக்கள் எனப் பலரும் பயன்படுத்திவரும் இவ் வீதியை மிக விரைவில் புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-49)

## வட-கிழக்கு பிரச்சினை தீர்வுக்கு

# அரசியல் கட்சிகளுடனான பேச்சுவார்த்தை ஆரம்பம்

வடக்கு-கிழக்கு பிரச்சினையை தீர்ப்பதற்கு அரசியல் கட்சிகளுடனான பேச்சு வார்த்தையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆரம்பித்துள்ளார்.

ஜாதிக் ஹெல உறுமயக் கட்சியுடன் இது தொடர்பாக பேச்சு வார்த்தை நடத்தியுள்ளதாக அரசியலமைப்பு விவகார மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர் டியு. குணசேகர தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் ஏனைய கட்சிகளுடன் அடுத்த வாரங்களில் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது.

அதனை அடுத்து பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கும் ஏனைய அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளார். (த-9)

# நாட்டுப்பற்றாளர்களின் புகழுடல்கள் விதைப்பு



வந்தாறுமூலை பலாச்சோலையில் சாவடைந்த நாட்டுப்பற்றாளர்களான யோகராசா யோகேஸ்வரி, யோகராசா வதனி ஆகிய இருவரது புகழுடல்கள் நேற்றுமுன்தினம் மாலை இலுப்படிச்சேனையில் நாட்டுப்பற்றாளர்களுக்காக உருவாக்கப்பட்டுள்ள நாட்டுப்பற்றாளர் துயிலும் இல்லத்தின் புனித விதை குழியில் விடுதலைப்புலிகளின் பூரண இராணுவ் மரியாதையுடன் விதைக்கப்பட்டது.

முன்னதாக இருவரது உடல்களும் இலுப்படிச்சேனை பாடசாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன. அங்கு மட்டக்களப்பு மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு மறறும் தளபதிகள்,பொறுப்பாளர்கள் போராளிகள் அஞ்சலி செய்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் செல்வன் மாமா தலைமையில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் தயா மோகன் இரங்கலுரை நிகழ்த்தினார்.

பின்னர் இவர்கள் நாட்டுப்பற்றாளர்களாக அறிவிக்கப்பட்டதையடுத்து இவர்களது உடல்கள் அடங்கிய பேழைகள் இலுப்படிச்சேனை நாட்டுப் பற்றாளர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டன. (த)

# பரீட்சை விதிகளை மீறுவோருக்கு கடும் தண்டனை வழங்கப்படும்

பரீட்சை விதிகளை மீறுவோருக்கு கடும் தண்டனை வழங்கப்படுவதுடன் அத்தகையவர்கள் அவர்களது வாழ்நாளில் பரீட்சைகளுக்கு தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

நாட்டில் சீரற்ற காலநிலை நிலவுவதால் நேர காலத்துடன் பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையங்களுக்கு சென்றுவிட வேண்டும் என்று ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

தேசிய அடையாள அட்டைகள் கிடைக்காதவர்கள் அவை இல்லைஎன்பதை தெரிவிக்க வேண்டும்.

அத்தகைய மாணவர்கள் தங்கள் அடையாளத்தை நிருபிக்கும் வகையில் அத்தாட்சிப் படுத்தப்பட்ட புகைப்படங்களை காண்பிக்கமுடியும்.

பிரச்சினைகள் எதுவும் எதிர்நோக்கப்பட்டால் பரீட்சார்ததிகள் அதுபற்றி 2876 214 என்ற தொலை பேசி இலக்கத்தோடு தொடர்புகொண்டு அறிவிக்கலாம். இந்தத் தடவை குறுகிய காலத்திலேயே பரீட்சை முடிவுகளை வெளியிடுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும குறிப்பிட்டார். (த-7)

# இந்தியக் கடற்படையின் கிழக்குப் பிராந்திய கடற்படைத்தளபதி - சரத்பொன்சேகா சந்திப்பு

(கொழும்பு)

உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்திருக்கும் இந்தியாவின் கிழக்குப் பிராந்திய கடற்படைத் தளபதி நாளை 11.20 மணிக்கு இலங்கையின் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன் சேகாவை இராணுவத்தலைமையகத்தில் சந்திக்கவுள்ளார்.

அன்றைய தினம் அவரை கௌரவிக்கும் முகமாக இராணுவத் தலைமையகத்தில் இராணுவ அணிவகுப்புபொன்று இடம்பெறவுள்ளது. இந்திய கடற்படை யுத்தக் கப்பல் எதிர்வரும் 16ஆம் திகதி வரை இலங்கையில் தரித்திருக்கும். இந்தக் காலப் பகுதியில் கடற்படையினரும் இந்தியக் கடற்படையினரும் இணைந்து பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபடுவர்.

அதேவேளை, 112 கடற்படையினர் உள்ளடக்கப்பட்ட இந்த யுத்தக்கப்பல் ஆயிரத்து 420 தொன்நிறையை கொண்டிருப்பதோடு மணித்தியாலத்திற்கு 24 கடல் மைல் வேகத்தில் பயணிக்கககூடிய தகமையைக் கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (த-9)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

2005ஆம ஆண்டில் பன்முகப்படுத்தப்பட்ட நிதி மூலம் யாழ் மாவட்டத்தில் செயற்படுத்தப்படும் வேலைத திட்டங்களின் வேலை முன்னேற்றம் தொடர்பான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை யாழ் செயலக மாநாட்டு மண்டபத்தில் காலை. 9.30 மணிக்கு நடைபெறவுள்ளதாக அர சாங்க அதிகாரிகளால் சாவகச்சேரி பிரதேச செயலகங்களிற்கும் உள்ளூராட்சி மன்றங்களிற்கும் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

வேலை முன்னேற்றம் சம்பந்தமான அறிக்கைகளுடன் கலந்து கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது. (த-47)

## ஆற்றுப்படுத்தல் நிகழ்வு

(பொன்னாலை)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு ஜி.ரி.இசற் நிறுவனம் ஆற்றப்படுத்தல் நிகழ்வுகளை மேற்கொண்டு வருகின்றது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வரும் நோக்குடனேயே மேற்படி ஆற்றுப்படுத்தல் நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருவதாக ஜி.ரி.இசற் நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதற்காக ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் ஒன்று அல்லது இரண்டு ஆசிரியர்களைத் தெரிவு செய்து அவர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டு அவர்கள் மூலமாக இந்த ஆற்றுப்படுத்தல் நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணத்தில், பருத்தித்துறை, மருதங்கேணி ஆகிய கல்விக் கோட்டங்களைச் சோந்த பாடசாலைகளில் மேற்படி ஆற்றப்படுத்தல் நிகழ்வுகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. (த-49)

## பிரபாவைச் சந்திக்க ஹக்கீம் தீர்மானம்

(கொழும்பு)

கிழக்கில் நடைபெற்று வரும் படுகொலைகள், வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளின தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

இச் சந்திப்பிற்கு முன்னதாக கிழக்கில் முஸ்லிம்கள் கொலை செய்யப்படுவது நிறுத்தப்படவேண்டும் என்றும் அவர்களுக்கு இன்னல்கள் ஏற்படுத்தப்படுவது நிறுத்தப்படவேண்டும் என்று விடுதலைப் புலிகளுக்கு எழுத்து மூலம் அறிவிக்கவுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூவ் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலை தொடர்பில் பேச்சுவார்த்தைக்கு வருமாறு விடுதலைப்புலிகளுக்கு அழைப்பு விடுத்திருப்பதாகவும் ஹக்கீம் தெரிவித்துள்ளார். (த-4)

## பெயர் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கப் பொதுக் கூட்டத்தில் சங்கத்தின் பெயரை வடக்கு - கிழக்கு மாகாண முகாமைத்துவ உதவியாளர் சங்கம் என மற்றுவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் தலைவராக ச.பரமேஸவரன், உபதலைவராக வே.சிவராஜலிங்கம், இ.தங்கராசா பொதுச் செயலாளராக செ.சந்திரசேகரம, உப செயலாளராக அ.குருநாதன், பொதுப் பொருளாளராக க.ஜெயானந்தன், உபபொருளாளராக கா.சண்முகதாசன் ஆகியோர் நியமிக்கபபட்டுள்ளனர்.

நிர்வாக உறுப்பினர்களாக விழலராணி சிவம், வே.இரத்தினவேல், தி.தவராசா, இ.தயாபரன், தி.வினாயகமூர்த்தி, வா.கனகராசா, சி.குலசிங்கம், நா.தங்கவேல் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (து-36)

## புதிய வீடமைப்புத் திட்டம்

(கொழும்பு)

புதியதொரு வீடமைப்புத்திட்டம் 3 மாதங்களுக்குள் அமுல் செய்யப்படும் என்று தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

வீடுகளைக் கட்டுவதற்கு காணிகளை ஒதுக்கீடு செய்தல், நகர்ப்புறத் தொடர்மாடி வீடுகளை திருத்தியமைத்தல், ஒவ்வொரு கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவிலும் 25 புதிய வீடுகளை நிர்மானித்தல் ஆகியன இந்தத் திட்டத்தில் அடங்குகின்றன.

கிராம சேவை உத்தியோகத்தர்கள் பிரிவுகளில் வீடுகளைக் கட்டுவதற்கான காணிகள் ஏற்கனவே இனங்காணப்பட்டுள்ளன.

கொழும்பு நகரிலும் ஏனைய நகர்புறங்களிலும் தொடர்மாடி வீடுகளை திருத்தியமைக்கும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தொடர்மாடி வீடுகளில் குடியிருப்போருக்கு அந்தவடுகளைச் சொந்தமாக வழங்குவதற்கான திட்டம் ஒன்றும் அமுல் செயயப்படும்.

இந்தத் தொடர்மாடி வீடுகளைக் கொள்வனவு செய்வதற்கு குறைந்த வட்டியில் கடன்களும் வழங்கப்படும் என்று வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை தெரிவிதத்துள்ளது.

அண்மையில் வீடமைப்பு அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின்போது இநத விபரங்கள் தெரிவிக்கப்பட்டன. (த.7)

## இரு வீதிகள் புனரமைப்பு

(பொன்னாலை)

வடக்கு- கிழக்கு மாகாண நிர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் கீழ், நாரந்தனை வடக்கு கிராமத்தில் முதற்கட்டமாக இரு வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

இவ் இரு வீதிகளும் தலா ஆறு லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளதென நீர்பாசன விவசாயத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

புனரமைப்புச் செய்வதற்கென தெரிவு செய்யப்பட்ட இரு வீதிகளையும் தார் இட்டு புனரமைப்புச் செய்வதாயின் மேற் குறிதத நிதி ஒதுக்கீடு போதாதென்றும் அவ்வாறு தாரிட்டுப் புனரமைப்பதாயின் ஒவ்வொரு வீதியிலும் அரை கிலோமீற்றர் நீளமான தூரத்தையே புனரமைப்பதற்கு மேற்குறிப்பிட்ட நிதி போதுமானதாக இருக்கும் என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது. (த-49)

## கண்ணிவெடியகற்றும் பணிகள் மழையினால் இடைநிறுத்தம்

(பொன்னாலை)

மாதகல் - பாணாவெட்டிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வந்த கண்ணிவெடி அகற்றும் பணிகள் யாவும் பருவகால மழையையடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

இப்பகுதியில் கண்ணிவெடி அக்றறும் பணிகளை - சுவீடன் நாட்டின் அனுசரணையுடன் வெண்புறா நிறுவனம் மேற்கொண்டு வந்தது.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் பருவகால மழைகாரணமாக பாணாவெட்டிப் ப்குதியெங்கும் பெருவெள்ளம் காணப்படுகின்றது. இதனால் தொடர்ந்து கண்ணிவெடி அகற்றும் பணிகளை மேற்கொள்ள முடியாதிருக்கின்றது.

அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் தொடர்ந்து இப்பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் தொடரும் எனவும் வெண்புறா நிறுவன வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (த-49)

## மின்சார சேவை அதிகரிக்கப்படும்

(கொழும்பு)

ஜப்பான் சர்வதேச கூட்டுறவு அமைப்பும், இலங்கை மின்சார சபையும் இணைந்து மேற்கொண்ட ஆய்வுக்கு இணங்க மின்சார சேவை 7.6 சதவீதமாக அதிகாிக்குமென்று எதிர்பார்க்கப்ப்டுகின்றது.

இதனடிப்படையில் 2025 ஆம் ஆண்டளவில் இலங்கையின் மின்சார சேவை 400 சதவீதத்தால் அதிகரிக்குமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகரிக்கும் இந்த மின்சார சேவைக்கு முகம்கொடுக்க எதிர்வரும் 20 வருட காலப்பகுதியில் 7 ஆயிரத்து 615 மெகாவைற மின்சாரத்தை மேலதிகமாக உற்பத்தி செய்ய வேண்டிய நிலையேற்படும் மென்று ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இக்கட்டான நிலையிலிருந்து மீள உடனடியாக நுரைச்சோலை மற்றும் கரவலப்பிட்டிய அனல்மின் நிலையங்களின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுளது.

இதிலிருந்து தவறும் பட்சத்தில் எதிர்வரும் காலங்களில் மின்சார விநியோகம் மட்டுப்படுத்தப்படுவதுடன் மின்சாரத்திற்கான கட்டண அதிகரிப்பும் தவிர்க்க முடியாததாகி விடுமென்றும் இந்த ஆய்வறிகைை எச்சரிக்கை விடுத்துள்ளது. (த-9)

## நாய்களுக்கும் பதிவு

செல்லப்பிராணியாக வடுகளில் வளர்க்கும் நாய்களை பதிவு செய்யும் கட்டாய சட்டமென்றை அமுல்படுத்த மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தீமானித்துள்ளது. இதற்கான புதிய சட்ட மூலமொன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக அமைச்சர் ஜானக பணடார தென்னக்கோன் தெரிவித்துள்ளாா.

பிரதேச சபை மற்றும் மாநகரசபைகளுக்குரிய 10 சட்டங்களில் காலப்போக்கில் திருத்தம் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறான நடவடிககைகளை மேற்கொள்வதற்கு தற்போது நடைமுறையிலுள்ள சட்ட திட்டங்கள் போதியளவில் இல்லையென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (த-9)

## பணிப்பாளர் நியமனம்

(பொன்னாலை)

வடக்கு - கிழக்கு மாகாண கால் நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் புதிய மாகாணப் பணிப்பாளராக கலாநிதி சி.கே.சிவபாலசிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்பதவியில் இதுவரை காலமும் கடமையாற்றி வந்த கலாநிதி எஸ்-சிவலிங்கம் ஓய்வு பெற்றுச் சென்றிருப்பதையடுத்தே, மேற்படி புதிய மாகாணப்பணிப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த நவம்பர் மாத்திலிருந்து தனது கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

சி.கே.சிவபாலசிங்கம் மத்திய மாகாண சபையில் பிரதிப் பணிப்பாளராகக் கடமையாற்றி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-49)

## தமிழ்தோணி வெளிவந்துள்ளது

யாழ்ப்பாண பல்கலைக்கழக, பேராதனை பல்கலைக்கழக, வெளிவாரி GAQ, B.A பட்டப்படிப்பில் தமிழ் படிக்கும் மாணவர்களுக்கு ஒரு கைநூலாக "தமிழ்தோணி" எனும் நூல் வெளிவந்துள்ளது.

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் போராசிரியர் அ.சண்முகதாஸ் ஆகிய இருவரும் இணைந்து எழுதியுள்ள இந்நூலை யாழ்ப்பாண பல்கலைக்கழக தமிழ் துறை தலைவரும் 60ஆவது அகவை காண்பவருமான பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவுக்கு பாிசாக அமைத்துள்ளனர். திருமதி அ.சண்முகதாஸ் தம்பதியரின் தமிழ் மொழிப் பணியைத் தொடரும் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, பேராசிரியர் அ.சண்முகதாஸின் மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நூலை பெற்றுக் கொள்ள விரும்புவோர் கோகுலம், வளாக ஒழுங்கை, திருநெல்வேலி. (தொலைபேசி இல: 222 3457) எனும் முகவரியில் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (த)

## யுத்த நிறுத்தக் கண்காணிப்புப் பணிகளில் ஆசிய நாடொன்றை இணைக்க முயற்சி?

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் 2002 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கையைக் கண்காணிப்பதற்கு வடக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து தெரிவுசெயயப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு நியமிக்கப்பட்ட யுத்த நிறுத்த கண்காணிப்பாளர்களை நீக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக அரசாங்க வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு போர் நிறுத்தக் கண்காணிபபுக் குழுவை நீக்குவது சம்பந்தமாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் கூட்டணிக் கட்சிகளிடமிருந்து யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக உள்ளக அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஜே.வி.பி ஆகிய கட்சிகள் இதுகுறித்து கடநத காலத்தில் பகிரங்கமாக தங்களின் கருத்துக்களைத் தெரிவித்திருந்தன.

தற்போது செயற்படும் கண்காணிப்புக் குழுவிற்கு பதிலாக சார்க் வலய நாடுகளில் அல்லது ஐரோப்பாவின் வேறு நாடுகளிலிருந்து புதிய கண்காணிப்பாளர்களைக் தெரிவு செய்து நியமிப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

யுத்த நிறுத்த கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஸ்கண்டினேவிய நாடொன்று உட்பட புதிய ஆசிய நாட்டுப் பிரவேசம் குறித்து கவனம் செலுததுவது உகந்தது என மஹிந்த ராஜபக்ஷ ஜபபானிய சிறப்பு தூதுவர் யசூசி அகாசியிடம் கூறியுள்ளார்.

எதிர்வரும் ஜனவரிக்குப் பின்னர் இந்த புதிய கண்காணிப்புக்குழு நியமிக்கப்படுவதற்கு இடமுள்ளதாகத் தெரிய வருகிறது. (த)

# இன்று ஒரு தகவல்

## மற்றவர் மகிழ்ச்சி

இந்த உலகத்தில் நாம் மட்டும் சந்தோஷமாக இருக்க வேண்டுமென்று நினைக்கிறோம் பாருங்கள். பக்கத்தில் இருப்பவர்களும் சந்தோஷமாக இருந்தால் தான் நாமும் சந்தோஷமாக இருக்கமுடியும். இதைப் பற்றி விபரமாகப் புரிந்துகொள்ள வேண்டுமென்றால் அதற்கு ஒரு கதை சொல்கிறேன் கேளுங்கள்.

ராஜயவர்த்தனன் என்று ஒரு ராஜா இருந்தார். அந்த ராஜா 7000வருடம் தன்னுடைய ராஜாங்கத்தை நல்ல விதமாக நிர்வாகம் செய்துகொண்டு வந்தார். 7000வருடம் எப்படி ஒருவர் இருக்கமுடியும் என்ற சந்தேகம் வருகிறதா? இது ஒரு புராணக் கதை. அதனால் அதையெல்லாம் மறந்துவிட்டு கதையை மட்டும் கவனியுங்கள். அதுதான் நமக்கு முக்கியம். மக்களுக்கெல்லாம் அந்த ராஜா மீது மிகுந்த மரியாதை.

ஒருநாள் ராணி அந்த ராஜாவுக்குத் தலையில் எண்ணெய் தேய்த்துக் கொண்டிருந்தாராம். திடீரென்று அவரது கண்கள் கலங்க ஆரம்பித்துவிட்டது. "என்ன விடயம்... ஏன் கலங்குகிறாய்?"என்று கேட்டிருக்கிறார் ராஜா. "உங்கள் தலையில் ஒரு முடி நரைத்திருக்கிறது. அப்படியென்றால் உங்களுக்கு வயதாகிவிட்டது என்றுதானே அர்த்தம்? அது தான் எனக்கு கவலையாக இருக்கிறது. அதனால் அழுதேன்" என்றார்.

"இதற்குப் போய் யாராவது அழுவார்களா? இது எமன் எனக்குக் கொடுத்திருக்கும் எச்சரிக்கை. நான் உடனே காட்டுக்குப் போய் தவம் செய்ய வேண்டும்" என்றார் ராஜா. "நானும் கூட வருவேன்" என்றார் அந்த ராணி. ராஜாவும் ராணியும் காட்டுக்குப் போய்விட்டால் மக்களின் நிலைமை என்னாவது? மக்கள் கூறினார்கள் "நீங்கள் இருவருமே காட்டுக்குப் போக வேண்டாம். கொஞ்சம் இருங்கள் இதோ வந்து விடுகிறோம்" என்று சொல்லிவிட்டு மக்கள் மிகவும் தூரத்திலிருந்த ஒரு சூரிய ஆலயத்திற்குச் சென்றார்கள். சூரியனை நோக்கித் தவம் செய்ய ஆரம்பித்தார்கள்.

மூன்று மாதம் ஆனது. சூரியபகவான் நேரில் அவர்களுக்குக் காட்சி கொடுத்தார்."உங்களுக்கு என்னவரம் வேண்டும்? கேளுங்கள்" என்றார்."எங்கள் ராஜா இன்னும் ஒரு 10,000 வருடம் நோய் நொடியின்றி இளமையுடனிருக்க வேண்டும். எங்கள் தேசத்தை ஆளவேண்டும்" என்றார்கள். "சரி. அப்படியே வரம் தந்தேன்"என்று கூறிவிட்டு சூரியபகவான் போய்விட்டார்.

ராஜாவுக்கு இந்த விடயம் தெரிந்தது. அவர் சந்தோஷப்பட வேண்டுமல்லவா?... படவில்லை. வருத்தப்பட்டார். "மகிழ்ச்சியடைவதற்குப் பதிலாக வருத்தப்படுகிறீர்களே ஏன்?" என்று கேட்டார் ராணி. இந்த வரத்தைக் கேட்டு நான் எப்படி சந்தோஷப்பட முடியும். நான் பத்தாயிரம் வருடம் உயிருடன் இருக்கலாம். ஆனால் நீ இருக்கமாட்டாயே இந்த வரத்தை எனக்கு வாங்கிக் கொடுத்த மக்களும் இருக்கமாட்டார்களே. என்னுடைய ராணியும் எனக்குப் பிரியமான மக்களும் இல்லாமல் நான் மட்டும் 10,000 வருடம் எப்படி சந்தோஷமாக இருக்கமுடியும்?" என்றார் ராஜா.

அதன்பின் அந்த ராஜாவும், ராணியும் அதே சூரியன் ஆலயத்திற்குப் போனார்கள். தவம் செய்தார்கள். நாட்டில் உள்ள எல்லோருமே 10,000 வருடங்கள் சந்தோஷமாக வாழ வேண்டுமென்ற வரத்தை வாங்கினார்கள். அதன் பின்பு எல்லோரும் மகிழ்ச்சியாக இருந்தார்கள். இதுதான் அந்தக் கதை. மார்க்கண்டேய புராணத்தில் இந்தக் கதை வருகிறது. மார்க்கண்டேயர் இந்தக் கதையைச் சொல்கிறார். அதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய உண்மை என்னவென்றால்....நாம் சந்தோஷமாக இருக்க வேண்டுமானால் மற்றவர்களும் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்பதுதான்.

அந்தக் காலத்தில் அப்படி இருந்தார்கள்... இந்தக் காலத்தில் அப்படியா இருக்கிறார்கள்?

அலுவலகத்தில் வேலை செய்யும் ஒருவர் தனது மனேஜரிடம் போனார். "சார்... இந்த அலுவலகத்தில் நீங்கள் சந்தோஷமாக இருந்தால்த்தான் நான் சந்தோஷமாக இருக்க முடியும். நீங்கள் சந்தோஷமாக இருக்க என்ன வழி?" என்று கேட் டார்.

"அது உன் கையில் தான் இருக்கிறது?"என்றார் மனேஜர். 'எப்படி?'என்று கேட்டார் இவர். "நீ மாற்றல் வாங்கிக் கொண்டு வேறு ஊருக்குப் போய்விடு... அதுபோதும்... நான் சந்தோஷமாக இருப்பேன்" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# சுயநிர்ணய உரிமை என்பது ஐ.நா.வினால் வரையப்பட்ட ஒரு இனத்தின் தனித்துவமான வாழ்வுரிமை -தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

சுயநிர்ணய உரிமை என்பது ஐ.நாவின் சர்வதேச மனித உரிமை சட்ட விழுமியங்களிலும் ஐ.நா.சாசனத்திலும் வரையப்பட்டுள்ள ஒரு இனத்தின் தனித்துவமான வாழ்வுரிமை என தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் வடக்கு-கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற சர்வதேச மனித உரிமைகள் தின நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இன்று எமது தேசத்தில் மனித உரிமைகள் தொடர்பான மேம்பாடுகள், சர்வதேச மனித உரிமை விழுமியங்கள் போன்ற செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக எமது தாயகத்திலே சமூகத் தலைவர்கள், மதத் தலைவர்கள், புத்தி ஜீவிகள், மனித உரிமை ஆர்வலர்கள், ஒன்று திரண்டு மனித உரிமைகளுக்கு முன்னுரிமை கொடுத்து எமது தாயகத்திற்கான மனித உரிமை செயலகத்தை உருவாக்கியுள்ளார்கள்.

இது உள்ளூரிலும் புலம்பெயர்ந்து வாழும் எமது மக்கள் மத்தியிலும் தொடர்பை உருவாக்கி சர்வதேச மனித உரிமை அமைப்புகளுடன் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்தி மிகச் சிறப்பாக செயற்பட்டு வருகிறது. இதனுடைய செயற்பாடுகள் மீது தமிழீழ மக்கள் முழு நம்பிக்கை கொண்டு தமது நிறைந்த ஆதரவை வழங்கி வருவது மிகுந்த உற்சாகத்தையும் மகிழ்வையும் தருகிறது.

மனித உரிமைச் செயலகத்தை முன்நின்று செயற்படுத்தி வரும் மதிப்பிற்குரிய அருட்தந்தை கருணாரட்ணம் அடிகளாருக்கும் மனித உரிமைப் பெரியவர்களுக்கும் எமது தலைவர் சார்பாகவும் எமது அமைப்பு சார்பாகவும் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மகிழ்வடைகிறேன்.

இலங்கைத்தீவு காலனித்துவத்தில் இருந்து விடுபட்ட நாளில் இருந்து அரசாங்கம் தமிழர் தேசம் மீதும் ஒரு தொடர்ச்சியான இடைவிடாத இன அழிப்பு போரை கட்டவிழ்த்துவிட்டுள்ளது. இக் கொடூரமான இன அழிப்பை எதிர்கொண்டு எமது அரசயல் தலைவிதியை நாமே தீர்மானித்துக் கொள்வதற்கான சுயநிர்ணய உரிமைப் போராட்டமாக எமது விடுதலைப் போராட்டம் பரிணமித்தது.

ஆரம்பத்தில் மென்முறையாக வடிவெடுத்த எமது போராட்டத்தை அரசாங்கம் சிங்கள இராணுவத்தின் துணைகொண்டு அடக்க முற்பட்டபோது எமது மென்முறைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக வடிவம் எடுத்தது.

இன்று எமது மக்கள் சுயநிர்ணய உரிமை கொண்ட எமது தலைவிதியை தாமே தீர்மானித்துக கொள்ளும் மக்கள் இனமாக தமது தனித்துவமான உயரிய பண்பாட்டு விழுமியங்களைப் பேணி கௌரவமான ஒரு தேசிய தலைமைத்துவத்தின் கீழ் ஒன்று திரண்டுள்ளனர். சுயநிர்ணய உரிமை என்பது ஐ.நாவின் சர்வதேச மனித உரிமை சட்ட விழுமியங்களிலும் ஐ.நா.சாசனத்திலும் வரையப்பட்டுள்ள ஒரு இனத்தின் தனித்துவமான வாழ்வுரிமை.

இந் நூற்றாண்டில் முக்கிய மனித உரிமைப் பிரச்சினையாக பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை பரப்பல், சர்வதேச பயங்கரவாதம் உலக மயமாக்கல் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகிய அரசுகளின் இறைமை, உலகளாவிய சூழல் வெப்பநிலை உயர்வு, எயிட்ஸ் போன்ற கொள்ளை நோய்களின் பரம்பல், உலகளாவிய வறுமை, நீண்ட சர்வதேச பிரசசினைகளின் பட்டியலில் முதல் இடத்தில் உள்ளதும், சர்வதேச மாநாடுகளில் அரச தலைவர்களின மட்டத்திலும் ஐ.நா. மற்றும் சர்வதேச அரசசார்பற்ற அமைப்புக்களின் தொனிப் பொருளாக சர்வதேச மனித உரிமைப் பிரச்சினைகள் அமைந்துள்ளன.



ஐ.நா.வில் சர்வதேச மாநாடுகளில் பங்குகொள்ளும் அரசியல்வாதிகளினதும் இராஜ தந்திரிகளினதும் பெரும் பகுதியான நேரம் மனித உரிமைகளுக்கு செலவிடப்படுகின்றது.

ஐ.நா.வில் மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகள் என்பது தனியே மனித உரிமைக்கான ஐ.நா. ஆணைக்குழுவினதோ அல்லது பல்வேறு உப கடடமைப்புக்களுடனோ மாத்திரம் தொடர்புபட்ட பிரசசினையல்ல இனப் பிரச்சினைகள் ஐ.நா.பொதுச் சபையில் இருந்து பாதுகாப்பு சடை வரை தொடர்புபட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் இரண்டு முக்கியமான குறிக்கோள்கள் உலக சமாதானமும் மனித உரிமைகளுமாகும். இதில் இருந்து நாம் மனித உரிமைகளின முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்வோம்.

சர்வதேச அரங்குகளில் மனித உரிமைகள் முக்கிய இடத்தை பிடித்துள்ளமைக்கு பல காரணங்கள் உள்ள இதில் இரண்டு முக்கிய காரணங்களை கவனத்தில கொள்ளவேண்டும்.

முதலாவது அமெரிக்க இரட்டைக் கோபுரங்கள் மீது செப்டெம்பர் 11இல் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு பின்னர் சர்வதேச அரசியலில் ஏற்பட்டுள்ள புதிய மாற்றங்கள் குறிப்பாக பயங்கரத்திற்கு எதிரான போர் என்ற புதிய அரசியல் சூழல் பயங்கரவாதததுகககு எதிரான போர் நடவடிக்கைகளும் இது தொடர்பாக சட்ட அமுலாக்கல்களும் ஐ.நா. மற்றும் பிராந்திய மனித உரிமை சட்ட விழுமியங்களை மீறுபவையாக அமைந்து சர்வதேச ரீதியிலும் ஐ.நாவிலும் சர்வதேச மனித உரிமை அமைப்புக்களின் கடும் விமர்சனங்களுக்கு ஆளாகியுள்ளது.

எம்மைப் பொறுத்தவரையில் இச்சூழல் சுயநிர்ணய உரிமைக்கான சர்வதேச சட்ட விழுமியங்களின் அடிபபடையிலும் ஐ.நா சாசனத்தின் அடிப்படையிலும் நெறிப்படுத்தப்பட்டுள்ள எமது சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை அரசு பயங்கரவாதமாக சர்வதேச அரங்கில் பேசுவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுத்துள்ளது.

இரண்டாவதாக இன்றைய சர்வதேச சூழலில் நாடுகள் தமது தேசிய சர்வதேச நலன்களை முன்னெடுப்பதற்கான கருவியாக மனித உரிமைகளை கையில் எடுத்து இருப்பதையும் இன்று மனித உரிமைகள் உலக அரங்கில் முக்கிய இடத்தையும் பிடித்து இருப்பதற்கான காரணமாகவுள்ளது.

இன்றைய யதார்த்த பூர்வ அரசியலில் மனித உரிமைகளின் பிரயோகம் என்பது நடுநிலை தவறிய இரட்டை நிலைப்பாடுகளைக் கொண்ட அணுகுமுறையாக பல சந்தர்ப்பங்களில் அமைந்து விடுவது வேதனைக்குரியது.

மேற்கு ஐரோப்பாவில் மனித உரிமைகளின் அடிப்படையிலான சிந்தனை பாரம்பரியமும் சர்வதேச மனித உரிமைகளுக்கான சட்டங்களையும் எமது போராட்டத்தின் நியாயத் தன்மைகளையும் ஒப்புநோக்குவதற்கும் எவ்வாறு எமது உரிமைகள் சிங்கள அரசுகளால் மீறப்பட்டு வருகின்றன என்பதையும் வெளிக்கொணர்வதற்கும் நாம் தெளிவாக மனித உரிமைகள் தொடர்பான சிந்தனை பாரம்பரியத்தையும் விளங்கிக கொள்வது அவசியம் என்றார்.

வடக்கு-கிழக்கு மனித உரிமைகள் செயலகப் பணிப்பாளர் அருட்தந்தை கருணாரட்ணம் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கருத்துரைகளை நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் சட்டத்தரணி எஸ்.சிவபாலன், கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம், உதவிக் கல்விப் பணிப்பாளர் மரியதாஸ் குருஸ்,எஸ்.குமாரவடிவேல் உட்படப் பலர் உரையாற்றினர்,

சர்வதேச மனித உரிமை நாளையொட்டி மாணவர்கள் மத்தியில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்ளுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன.(த)

# பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

யாழப்பாணம் மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களிற்கு உள்ளூராட்சி மன்றம் தொடர்பான அறிவு, திறமை, ஆளுமை விருத்தி சம்பந்தமான பயிற்சிப் பட்டறை இன்றும் நாளையும் யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் காலை 7மணி தொடக்கம் நடைபெறவுள்ளதாகவும் இப் பயிற்சிப் பட்டறையில் குறிப்பிட்டுள்ள உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்கள், நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களை கலந்து கொள்ளுமாறும் யாழ்.மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா கடிதமூலம் சகல உள்ளூராட்சி மன்றங்களிற்கும் அறிவித்துள்ளார். பயிற்சிப் பட்டறை நடைபெறும் நிகழ்ச்சி நிரலும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-47)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அரச திணைக்களங்களில் கடமையாற்றும் முகாமை உதவியாளர்களின் ஆளுமை விருத்தி சம்பந்தமான ஒருநாள் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் டிசம்பர் 14ஆம் திகதி ஆரம்பமாகி டிசம்பர் 16ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் செயலக மாநாட்டு மண்டபத்தில் காலை 9.00மணி தொடக்கம் பி.ப 5மணி வரை நடைபெறவுள்ளது.

இபபயிற்சிப் பட்டறையில் கலாநிதி க.குகதாசன கலந்துகொண்டு கருத்துரை வழங்கவுள்ளார்.

இப் பயிற்சிப் பட்டறையில் கலந்துகொள்ளுவோரின் பெயர் விபரங்கள் நிகழ்ச்சி நிரல் என்பன யாழ்ப்பாணம் செயலகத்தினால் சகல திணைக்களங்களிற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களை தவறாது இப் பயிற்சிப் பட்டறையில் கலந்துகொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது. (த-47)

# நினைவஞ்சலி நிகழ்வு

(பொன்னாலை)

ஆழிப்பேரலையால் இறந்தவர்களின் ஓராண்டு நினைவஞ்சலியை குடத்தனை தென்னிந்தியத் திருச்சபையில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 26ஆம் திகதி மாலை 3மணிக்கு நினைவஞ்சலி நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்த நினைவஞ்சலி நிகழ்வை யாழ்.கிறிஸ்தவ ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது.இது தொடர்பாக யாழ். கிறிஸ்தவ ஒன்றியம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

ஆழிப்பேரலையால் உயிரிழந்தவர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இந்த அஞ்சலிநிகழ்வில், மத வேறுபாடின்றி அனைவரும் கலந்துகொள்ளலாம் என்றும், இவ்வாறான நிகழ்வுகளை மேற்கொள்ளுவதன் மூலம் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டிருப்போரை ஆற்றுப் படுத்த முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-49)

# முரளி- கும்ளேயின் சுழலில் அணிகளின் நிலை சமஅளவில்!

இந்தியாவுக்கு கிரிக்கெற் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணிக்கும் இந்திய அணிக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி



யின் இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் இலங்கை அணி தனது முதலாவது இனிங்ஸில் 6விக்கெற் இழப்பிற்கு 198 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இப் போட்டி புதுடில்லியில் உள்ள பெரோசா கொக்லா மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இப் போட்டியில் சூழல்பந்து வீச்சாளர்களான இலங்கை அணியின் முத்தையா முரளிதரனும் இந்திய அணியின் அனில் கும்பிளேயும் பந்து வீச்சில் பிரகாசித்ததன் காரணமாக போட்டியின் நிலை சம அளவில் மோதிக்கொள்ளப்பட்ட வண்ணம் உள்ளன.

நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டத்தில் முத்தையா முரளிதரன் 100 ஓட்டங்களுக்கு 7விக்கெற்றினையும் வீழ்த்தியதன் காரணமாக துடுப்பாட்டத்தில் பிரகாசித்த இந்தியா இறுதியில் அதன் முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 290 ஓட்டங்களைப் பெற்றது.

நேற்றுக்காலை தனது முதல் இனிங்சை 3 விக்கெற் இழப்பிற்கு 245 ஓட்டங்கள் என்ற நிலையில் இருந்த இந்திய அணி சௌரவ்கங்குலி 40ஓட்டங்களுக்கும் சாதனைவீரர் சச்சின் டெண்டுல்கரை 109 ஓட்டங்களுக்கும் இழந்தது.

இதனைத் தொடர்ந்து இந்திய அணியின் ஏனைய வீரர்கள் 45 ஓட்டங்களுக்குள் தொடர்ச்சியாக தமது விக்கெற்



றுக்களைப் பறிகொடுத்தார்கள்.தொடர்ந்து துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கைஅணி இந்திய அணியின் அனில் கும்பிளே 54 ஓட்டங்களுக்கு 4விக்கெற்றினை தொடர்ச்சியாக வீழ்த்தியதன் காரணமாக நேற்றைய ஆட்டநேர முடிவின் போது இலங்கை அதன் முதல் இனிங்ஸில் 6 விக்கெற்றினை இழந்து 198 ஓட்டங்களைப் பெற்றது.

இலங்கையணித்தலைவர் மார்வன் அத்தபத்து 88 ஓட்டங்களையும், மஹெல ஜெயவர்த்தன 60 ஓட்டங்களையும் குவித்ததோடு மூன்றாவது விக்கெற்றில் 113 ஓட்டங்களைப் பகிர்ந்தார்கள். (4)

# சாதனையை தந்தையிடம் அர்ப்பணிப்பு

## – சச்சின்



இலங்கைக்கு எதிரான டெஸ்டில் டெண்டுல்கார் 35ஆவது சதம் அடித்து கவாஸ கரின் சாதனையை முறியடித்தார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது,

கவாஸ்கரின் சாதனையை முறியடித்தது மிகவும் சந்தோஷமாக உள்ளது. எனது முதல் சதத்திற்கும், இப்போது அடித்த சதத்திற்கும் வித்தியாசம் உள்ளது. ஆனால் இரண்டும் முக்கியத்துவம் வாய்ந்தது. முதல்சதம் வாழ்நாளில் மறக்கமுடியாத ஒன்று.

35ஆவது சதம் அடித்தபோது மிகவும் பதற்றமாக இருந்தது. இந்த சாதனைகளை படைப்பதற்கு எனது தந்தைதான் முக்கிய காரணம். என்னை அவர் மிகவும் ஊக்குவித்தார். எனது சாதனைகளை அவருக்கு அர்ப்பணிக்கிறேன்.

டெல்லி டெஸ்டில் சதம் அடிக்க பயிற்சியாளர் சப்பலும் எனது மனைவியும் உறுதுணையாக இருந்தார்கள். சப்பல் சதம் அடிப்பதை கருத்தில் கொண்டு விளையாடவேண்டாம் எனவும், எப்போதும் போல் ஆடுமாறு கூறினார். இதே கருத்தை எனது மனைவி அஞ்சலியும் கூறினார்.

கவாஸ்கர் பல சாதனைகளை படைத்தவர். என்னுடைய சாதனைகளுக்கும் அவரும் உதவி புரிந்துள்ளார். கவாஸ்கர்தான்என்னுடைய ஹீரோ. தற்போது அணி மிகவும் நன்றாக உள்ளது. வீரர்கள் ஒற்றுமையுடன் விளையாடுகிறோம். இவ்வாறுஅவர்கூறினார். (த-39)

# நியூசிலாந்து 2 விக்கெட்டுக்களால் அவுஸ்திரேலிய அணியை வென்றது



நியூசிலாந்து அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான சப்பல்- ஹாட்லிக் கிண்ண ஒருநாள் தொடரில் மூன்றாவதும் இறுதியுமான போட்டியில் நியூசிலாந்து அணி 2 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட் இழப்பிற்கு 331 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் பொன்டிங் 75, மைக்கல் கிளார் 71, ஹொட் 59 ஓட்டங்களையும் ஹுஃசை ஆட்டமிழக்காமல் 88 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நியூசிலாந்து அணி சார்பாக மாட்டின் 3, விக்ரோறி 2 விககெட்டுக்களையும் மில்ஸ்,ஸ்ரைரிஸ் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். தொடர்ந்து 332 என்ற இமாலய இலக்குடன் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 49 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 332 ஓட்டங்களைப் பெற்று 2 விக் கெட்டுக்களால் வெற்றி பெற்றது.




ஸ்ரைரிஸ் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 101 ஓட்டங்களையும் மற்றும் ஆட்டமிழக்காமல் மக்குலம் 50, விக்ரோறி 23 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில அவுஸ்திரேலிய அணி சார்பாக கிளாா 4 விக்கெட்டுக்களையும் விவிஸ், பிறக்கன், வைற் மற்றும் சைமன்ஸ் கியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இப்போட்டியுடன் அவுஸ்திரேலிய அணி 3 போட்டிகள் கொண்ட தொடரை 2-1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. (த-39)

**விளையாட்டு செய்திகள்**


# முதலாவது ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து 42 ஓட்டங்களால் வெற்றி

பாகிஸ்தான் இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதலாவது போட்டி நேற்று முன்தினம் லாகூர் கட்டாபி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதனடிப்படையில் இங்கிலாந்து அணி 50



ஓவர்களில் 4 விக்கெட் இழப்பிற்கு 327 ஓட்டங்களைப் பெற்றது. இங்கிலாந்து அணிசார்பாக துடுப்பாட்டத்தில் ஸ்ரரஸ் 94, பீற்றர்சன் 56, பிறியர் 45 ஓட்டங்களையும் மற்றும் பிளின்டொப் 72, கொலிங்வூட் 34 ஆட்டமிழக்காமல் ஓட் டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் முகமட் சமி, நவீட் உல்ஹசன், கனேரியா



மற்றும்மலிக் ஆகியோர் தலா ஒரு விககெட்டுக்களைப் பெற்றனர். 328 ஓட்டங்கள் என்ற பெரிய இலக்குடன் ஆட்டத்தை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி 46.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 285 ஓட்டங்களைப் பெற்று 42 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.


பாகிஸ்தான் சார்பாக துடுப்பாட்டத்தில்சல்மான் பட் 67,யூனிஸ்கான் 60, மொகமட்யூசப்59, சொகைப் மலிக் 50 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் பிளின்ரொப், பிளாவ்கேற் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் ஹர்மிசன், அன்டர்சன் மற்றும் கொலின்வூட் ஆகியோர் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றி னர். ஆட்ட நாயகனாக இங்கிலாந்து அணியின் ஸ்ரரஸ் தெரிவானார். இங்கிலாந்து அணி 5 போட்டிகள் கொண்ட தொடரில் 1-0 என்ற கணக கில் முன்னிலையில் உள்ளது. (த-39)



(இடது) உலகக் கோப்பை சின்னம். (வலது) பட்டம் வெல்லும் அணிக்கு வழங்கப்படும் உலகக் கோப்பை.

# இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்

## லியனார்டோ - டா - வீன்சி



(Leonardo da Vinci, 1452–15 –19): பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கிய மேதை லியனார்டோ டா வீன்சி. இவர் சிறந்த ஓவியராகவும், சிற்பியாகவும், கட்டடக் கலைஞராகவும், இசை மேதையாகவும் இருந்தார். மேலும் கணிதம், பொறியியல், தாவரவியல், உயிரியல், வானவியல் ஆகிய துறைகளிலும் இவர் பேரறிஞராக விளங்கினார். பறவைகள் பறப்பதைக் கூர்ந்து கவனித்து வானத்தில் பறப்பதற்கென்று சறுக்கு விமானத்தின் மாதிரி ஒன்றை இவர் வரைந்தார். போருக்குப் பயன்படும் டாங்கிகளையும் படைக்கலங்களையும் உருவாக்குவதற்குப் படங்களை வரைந்தார். மனிதனின் உடலமைப்பைப் பற்றியும் இவர் விளக்கமான குறிப்புகளை எழுதியுள் ளார்.

இத்தாலியில் பிளாரன்ஸ் அருகே வீன்சி என்னும் கிராமத்தில் லியனார்டோ பிறந்தார். இசையிலும், சித்திரம் வரைவதிலும் இவருக்கு மிகுந்த விருப்பம் இருந்தது. ஓவியக் கலையைப் பயின்று பல அழகான ஓவியங்களை வரைந்தார். 1478இல் குழந்தை யேசுவின் அருகிலிருக்கும் மரியம்மையின் ஓவியத்தைத் தீட்டினார். இது பலரைக் கவர்ந்தது.

லியனார்டோ 1482இல் மிலான் நகருக்குச் சென்றார். அங்கு லூடோவீக்கோ (Ludovico) என்னும் இளவரசரின் அரண்மனை ஓவியராக நியமிக்கப்பட்டார். இவர் பொறியியல் நிபுணராக இருந்ததால் இளவரசர் மாளிகையின் அரண்களை வலுப்படுத்த உதவினார். பின்பு வெனிஸ்,பிளாரன்ஸ், ரோம் முதலிய இடங்களில் சில ஆண்டுகள் தங்கினார்.

1494இல் இவர் வரைந்த 'இறுதி விருந்து' (The Last Supper) என்னும் ஓவியம் உலகப் புகழ்பெற்றது. இவர் பிளாரன்ஸில் இருந்தபோது 'மோனாலீஸா' (Mona Lisa) என்ற நேப்பிள்ஸ் நகரப் பெண்ணின் அழகிய படத்தை வரைந்தார். 1516ஆம் ஆண்டில் பிரெஞ்ச் மன்னர் முதலாம் பிரான்சிஸ் அழைப்பின் பேரில் இவர் பிரான்ஸ் சென்றார். அங்கு இவருக்கு அளிக்கப்பட்ட மாளிகையில் தங்கி அமைதியாகத் தம் வாழ்நாளைக் கழித்தார்.

## ஈரமடம்

சிவராமன் என்றொரு பணக்காரர் இருந்தார். அவருக்கு ஏழைகளைக் கண்டாலே பிடிக்காது. அவருக்கு மகேஷ் என்றொரு மகன் இருந்தான். மகேசுக்கு ராமு என்றொரு நண்பன் இருந்தான். அவர்கள் வீட்டுத் தோட்டக்காரனின் மகன்தான் ராமு. இருவரும் ஆறாம் வகுப்பு படித்து வந்தார்கள்.


ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடு இல்லாமல் மகேஷ், ராமுவிடம் பிரியமாக பழகி வந்தான். இருவரும் இணைபிரியாத நண்பர்களாக பழகி வந்தார்கள். ராமு படிப்பில் கெட்டிக்காரன். அவன்தான் வகுப்பில் முதல் மாணவனாக இருந்து வந்தான்.

மகேஷ், ராமுவுடன் சரிசமமாக பழகுவது சிவராமனுக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை. தன் மகனைவிட தோட்டக்காரனின் மகன், அதிக மதிப்பெண் வாங்குவதை அவரால் சகித்துக் கொள்ளவே முடியவில்லை.

அதனால் ராமு படிக்கும் போது ஏதாவது வேலை கொடுத்து அவனைப் படிக்கவிடாமல் செய்துவந்தார் சிவராமன். அப்பாவின் செயலைக் கண்டிக்க முடியாமல் மனம் வருந்தினான் மகேஷ். கடவுள்தான் தன் தந்தைக்கு நல்ல புத்தியை தர வேண்டும் என்று தினமும் கடவுளை வேண்டிக்கொண்டான்.

ஒருநாள் மகேஷ் பாடம் படித்துக்கொண்டிருந்தான். சற்றுத் தள்ளி சோபாவில் அமர்ந்து செய்தித்தாள் வாசித்துக் கொண்டிருந்தார் சிவராமன்.

அப்போது, அருகில் இருந்த அலுமாரியில் இருந்து ஒரு கருந்தேள் வெளிப்பட்டது. தன் கொடிய கொடுக்குகளை அசைத்தபடி கருந்தேள் மகேஷின் அருகில் சென்றது. ஏதோ வேலையாக எழுந்த சிவராமன் கருந்தோளை பார்த்துவிட்டார்.



அவரது உடம்பு நடுங்கியது. எந்தநேரமும் மகேஷை கருந்தேள் கொட்டி விடும் அபாயம். என்ன செய்வது என்று புரியாமல் சிலையாக நின்றிருந்தார் சிவராமன்.

அப்போது வீட்டிற்குள் நுழைந்தான் ராமு. கையில் சலவை செய்த துணிகள் இருந்தன. சிவராமனின் பதற்றத்தையும், அவரது பார்வை சென்ற திசையையும் பார்த்தான் ராமு. அவனுக்கு நடக்க இருக்கும் அபாயம் புரிந்தது.

கணநேரமும் தாமதிக்காமல் மின்னல் எனப் பாய்ந்தான் ராமு. தன் உள்ளங்கையால் கருந்தேளை ஓங்கிக் குத்தினான்.

அவ்வளவுதான் கருந்தேள் நடுங்கிசெத்துப்போனது. ஆனால் அதேநேரம் 'ஆ' என்று அலறியபடி தரையில் சாய்ந்தான் ராமு.

தன் உயிரைப் பற்றி கொஞ்சமும் சிந்திக்காத அந்த ஏழைச் சிறுவனின் தியாக உள்ளம் சிவராமனின் கல்நெஞ்சையும் கலக்கியது.

சிவராமன் பாய்ந்து சென்று ராமுவை தூக்கி காரில் போட்டுக் கொண்டு மருத்துவமனைக்கு விரைந்தார். அவன் அருகிலேயே இருந்து அவனை கண்ணும் கருத்துமாக பார்த்துக் கொண்டார்.

தக்க சமயத்தில் செய்த சிகிச்சை காரணமாக ராமு உயிர் பிழைத்துக் கொண்டான்.


"வசதியில் நீ ஏழையாக இருந்தாலும் குணத்தில் நீ கோடீஸ்வரன்". கண்விழித்த ராமுவின் கைகளைப் பிடித்தபடி கண்கலங்கினார் சிவராமன்.

அன்றிலிருந்து அவரது குணமும் மாறியது. ராமுவை தன் சொந்த மகனைப் போலவே நடத்தினார். ஏழைகளிடமும் கருணையுடன் நடந்து கொண்டார். தன் தந்தைக்கு நல்ல பாடம் புகட்டிய கடவுளுக்கு மகேஷ் நன்றி கூறினார்.

## கண்டுபிடியுங்கள்

அன்புக் குழந்தைகளே!

கீழேயுள்ள இரண்டு படங்களுக்குமிடையே குறைந்த பட்சம் 7 வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்?



## உங்களுக்குத் தெரியுமா?

*பாலைவனங்களில் சிலசமயம் பேய்மழை பெய்வதுண்டு. ஆனால் மழைநீர் தரையை எட்டுவதற்கு முன்பே ஆவியாகிவிடும்.

*சிலி,ஆர்ஜென்டினா நாடுகளுக்கு இடையே ஓடும் ஒரு ஆற்றின் நீர் புளிப்பாக இருக்கிறது.

*மிசிசிப்பியின் கிளை நதியான பைச்சாமுலாவின் நீரில் மாலை நேரத்தில் ஒருவித இசை கேட்கிறது.

*ஒட்டகம் ஒன்று இறந்து கிடப்பதைப் பார்த்தால் மற்றொரு ஒட்டகம் பார்த்த அதிர்ச்சியில் இறந்துவிடும்.

## ஆமையின் சாகசம்

எம்.வி.ஜீனியஸ் என்பது மலேசியா நாட்டுக்குச் சொந்தமான கப்பல் ஆகும். இந்தக் கப்பல் வங்காள விரிகுடாக் கடலில் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 13ஆம் திகதி மூழ்கியது. அந்தக் கப்பலில் இருந்த ஊழியர்கள் காவோ, ஊ மற்றும் ஜுயூன் மூவரும் புயல்காற்று வீசிக் கொண்டிருந்தபோது கப்பலில் இருந்து கடலுக்குள் குதித்தனர். காவோ, ஊ இருவரும் உயிர் பாதுகாப்பு அங்கிகளை அணிந்திருந்தனர். இதனால் அவர்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் ஜுயூனுக்கு கிடைத்ததோ ஒரு மரக்கட்டை.



நான்கு புறமும் கடல். கண்ணுக்கு எட்டிய தூரம் வரை எந்தக் கப்பலும் அவர்களுக்குத் தென்படவில்லை. அவர்களுக்கு இனி நாம் வாழ்க்கையில் கடற்கரையைப் பார்ப்போமா என்று சந்தேகம். அந்த அளவிற்கு கடலில் புயல்காற்று. அப்போதுதான் காவோ ஒரு பெட்டி மிதப்பதைப் பார்த்தார். அந்தப் பெட்டியை மட்டும் எட்டிவிட்டால் அதன் மீது ஏறி நின்று எப்படியும் அந்தப் பக்கமாக வருகிற கப்பலையோ, ஒரு படகையோ நிறுத்தி உயிர் தப்பிவிடலாம் என்று நினைத்து அந்தப் பெட்டியை நெருங்க முயன்றார். ஆனாலும் அவரால் அந்தப் பெட்டியின் அருகில் நெருங்க முடியவில்லை. என்ன ஆச்சரியம் சிறிது நேரத்தில் அந்தப் பெட்டியே தானாக காவோ அருகில் நெருங்கி வந்தது. அப்போதுதான் அந்தப் பெட்டியை ஒரு இராட்சத ஆமை தள்ளிக்கொண்டு வருவது தெரிந்தது.

ஆனால் அதற்கு மேற்கொண்டும் அந்தப் பெட்டியை காவோவின் அருகில் தள்ளிவர முடியவில்லை. இதனால் அந்த ஆமையே காவோவைத் தள்ளிக்கொண்டுபோய் அந்தப் பெட்டியின் அருகில் விட்டது. இதற்கிடையே ஜுயூன் தனது மரக் கட்டையைத் தவற விட்டுவிட்டார். அவரை இன்னொரு ஆமை பல நேரம் தண்ணீரில் மூழ்கிவிடாமல் தாங்கிக் கொண்டிருந்தது. இதில் ஒரு ஆச்சரியமான விஷயம் என்னவென்றால் கடலில் விழுந்த வர்கள் மூவரையும் காப்பாற்ற வேறு கப்பல் வரும் வரை 34 மணிநேரம் இந்த இரண்டு ஆமைகளும் கடலில் தத்தளித்தவர்களுக்கு உதவியிருக்கின்றன. இப்படி அமைகள் உதவியது. இதுதான் உலகில் முதல் தடவை என்று கூறப்படுகிறது.

ஆமைகள் இப்படி உதவியது குறித்து வனவிலங்கு நிபுணர் ஒருவர் கூறும்போது,

இந்த இரண்டு ஆமைகளும் ஆலிவர் ரிட்லி இனத்தைச் சார்ந்தவை. இந்த ஆமைகள் ஏப்ரல் முதல் நவம்பர் முடிய இந்திய கிழக்கு கடற்கரையோரம் முட்டையிட்டு குஞ்சுகள் பொரிப்பதற்காக வரும். அப்படி வந்தநேரத்தில் தான் இந்தச் சம்பவம் நிகழ்ந்திருக்க வேண்டும். இந்த ஆமைகள் இயற்கையாகவே உதவும் சுபாவம் கொண்டவை என்றார்.

சிறுவர் பாதுகாப்பு இலங்கை
யாழ்ப்பாணம்

# இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்

## அனைவரும் அறிந்து வைத்திருக்க வேண்டிய

## சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம்

**சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் 1989 நவம்பர் 20ஆம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

**உறுப்புரை 4**

இச்சமவாயத்தில் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கும் உரிமைகளை நடைமுறைப் படுத்துவதற்கு உரிய சட்டவாக்க, நிர்வாக, இன்னபிற நடவடிக்கை அனைத்தையும் அரசதரப்பினர் எடுத்தல் வேண்டும். பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் சம்பந்தப்பட்டமட்டில், அரச தரப்பினர் தம்வசமிருக்கும் மூல வளங்களை இயன்றளவு அதிகமாகப் பயன்படுத்த நடவடிக்கை எடுப்பதுடன், அவசியம் ஏற்படும் போது சர்வதேச கட்டுக்கோப்பினுள்ளும் இயங்க வேண்டும்.

**உறுப்புரை 5**

தற்போதைய சமவாயத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் உரிமைகளைத்



தனது பரிணாம வளர்ச்சித் திறனுக்கு அமைய, பிள்ளை அனுபவிப்பதற்குப் பொருத்தமான வழிமுறை களைக் காட்டுவதில் பெற்றோர் அல்லது உள்ளூர் வழக்கத்தின்படி நியமிக்கப்பட்ட கூட்டுக் குடும்ப உறுப்பினர்கள் அல்லது சமூகத்தினர், சட்டப்படியான பாதுகாவலர்கள் அல்லது சட்டப்படி குழந்தைக்குப் பொறுப்பாயிருக்கும் ஏனையோருக்கு உள்ள கடப்பாடுகளை அரசதரப்பினர் மதித்தல் வேண்டும்.

**உறுப்புரை 6**

1. ஒவ்வொரு பிள்ளைக்கும் உயிர் வாழும் உரிமை இயற்கையாகவே கிடைத்ததென்பதை அரசதரப்பினர் ஏற்றுக்கொள்கின்றனர்.

2. அரசதரப்பினர் பிள்ளையின் உய்வையும் விருத்தியையும் தம்மால் முடிந்தவரை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

**உறுப்புரை 7**

1. பிள்ளை பிறந்ததும் பிறப்புப் பதிவு செய்யப்படல் வேண்டும். அத்துடன் பிறந்ததும் தனக்கென ஒரு பெயரைப் பெறும் உரிமை, ஒரு தேசிய இனத்தை வரிக்கும் உரிமை, தன்னால் இயன்றவரை தன் பெற்றோரை அறிந்து அவர்களின் பராமரிப்பைப் பெறும் உரிமை ஆகியனவும் அதற்கு உண்டு.

2. இந்த உரிமைகள் தமது தேசிய சட்ட வரையறைக்கு அமைய நடைமுறையாவதையும் அவற்றின் பால் தமக்குள்ள கடப்பாடுகள், இத்துறை சம்பந்தப்பட்ட சர்வதேச சாதனங்களின் கீழ் நிறைவேற்றப்படுவதையும் அரசதரப்பினர் உறுதிப்படுத்துதல் வேண்டும். குறிப்பாக, குழந்தை நாடற்ற நிலைக்கு ஆளாகும் என காணும் பட்சத்தில் இவ்வுரிமைகள் நிச்சயம் உறுதிப்படுத்தப் படல் வேண்டும்.

**உறுப்புரை 8**

1. சட்டவிரோதமான தலையீடின்றி, சட்டம் அங்கீகரித்தவரான தேசிய இனம், பெயர், குடும்ப உறவுகள் அடங்கலான தனது ஆளடையாளத்தைப் பிள்ளை பேணும் உரிமையுடையதென்பதை மதிப்பதற்கு அரசதரப்பனர் உடன்படல் வேண்டும்.

2. பிள்ளையின் ஆளடையாளத்தின் சில அல்லது எல்லாக் கூறுகளும் சட்ட விரோதமான முறையில் மறுக்கப் பட்டால் அப்பிள்ளையின் ஆளடையாளம் மீண்டும் நிலைநாட்டப்படும் பொருட்டு அரசதரப்பனர் உரிய உதவியும் பாதுகாப்பும் வழங்குதல் வேண்டும்.

**உறுப்புரை 9**

1. முறையான சட்டத்துக்கும் நடைமுறைகளுக்கும் அமைய தகுதி வாய்ந்த நீதிவிசாரணை அதிகாரிகளால் விசாரிக்கப்பட்டு அதன் நலனுக்கு அவசியமெனத் தீர்மானிக்கப்பட்டாலன்றி ஒரு பிள்ளை பெற்றோரிடமிருந்து அவர்களின் விருப்பத்துக்கு மாறாகப் பிரிக்கப்படாதிருப்பதை அரச தரப்பினர் உறுதி செய்தல் வேண்டும். பிள்ளையைப் பெற்றோர் இம்சைப்படுத்துதல், புறக்கணித்தல், துன்புறுத்தல் அல்லது பெற்றோர் பிரிந்து வெவ்வேறு இடங்களில் வாழும் நிலை பிள்ளையின் வசிப்பிடம் எதுவெனத் தீர்மானிக்க வேண்டிய நிலை போன்ற குறிப்பிட்ட சந்தர்ப்பங்களிலேயே இவ்வாறான முடிவு அவசியமாகலாம்.

2.மேற்குறித்தவாறான விசாரணையின் போது பிள்ளையில் அக்கறையுள்ள சகல தரப்பினரும் விசாரணையில் பங்கு கொள்ளவும் தமது கருத்துக்களை வெளியிடவும் வாய்ப்பளிக்கப்படல் வேண்டும்.

3.பெற்றோரிடமிருந்து பிரிக்கப்பட்ட பிள்ளை அதன் சேமநலனுக்கு உகந்ததல்லவெனக்கருதினாலன்றி பெற்றோருடன் கிரமமான முறையில் சொந்த உறவையும் நேரடித் தொடர்பையும் பேணும் உரிமையுடையதென்பதை அரச தரப்பினர் மதித்தல் வேண்டும்.

4. அத்தகைய பிரிவானது அரசதரப் பொன்று மேற்கொண்ட தடுத்து வைத்தல், சிறை வைத்தல், கடத்தல் போன்ற நடவடிக்கையினால் அல்லது (அரசாங்கத்தின் காவலில் இருக்கும் போது எக்காரணத்தினாலும் ஏற்படக்கூடிய மரணம் அடங்கலான) பெற்றோர் இருவரினதும் அல்லது ஒருவரின் அல்லது பிள்ளையின் மரணத்தினால் நிகழும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட நாடு பெற்றோர் பிள்ளை அல்லது குடும்பத்தின் மற்றோர் உறுப்பினருக்கு [illegible]ந்து போன குடும்ப அங்கத்தவர் [illegible]றிய முக்கியமான தகவல்களைக் கேட்டால் அத்தகவல் குழந்தையின் நல்வாழ்வுக்கு குந்தகம் உண்டாக்குமாயிருந்தாலன்றி மற்றும்படி கொடுக்கப்பட வேண்டும். விண்ணப்பம் அதனளவில் சம்பந்தப்பட்ட நபர்களுக்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தாதிருப்பதை அரச தரப்பினர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

**உறுப்புரை 10**

1. குடும்பத்துடன் சேரும் பொருட்டு ஒரு பிள்ளை அல்லது அதன் பெற்றோர் ஓர் அரச தரப்பிலிருந்து வெளியேற அல்லது நாட்டினுள் நுழையவெனச் சமர்ப்பிக்கும் விண்ணப்பங்களை அரச தரப்பினர் ஒன்பதாம் உறுப்புரையின் முதலாம் பந்தியிற் குறிப்பிட்ட கடப்பாட்டுக்கமைய மனிதாபிமானத்துடன் தீர்க்கமாகவும், துரிதமாகவும், கவனித்தல் வேண்டும். அத்தகைய விண்ணப்பங்களைச் சமர்ப்பித்ததனால் விண்ணப்பதாரருக்கும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கும் எந்தவித பாதகமான விளைவுகளும் ஏற்படாதிருப்பதையும் அரசதரப்பினர் உறுதிப்படுத்தல் வேண்டும்.

2.ஒரு பிள்ளையின் பெற்றோர் வெவ்வேறு நாடுகளில் வசிப்பவர்களாயிருந்தால் தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் தவிர மற்றும்படி அவர்களுடன் சொந்த உறவையும் நேரடித் தொடர்புகளையும் வைத்துக் கொள்ளும் உரிமை அப்பிள்ளைக்கு உண்டு. இந்த நோக்கத்தின் பொருட்டு ஒன்பதாம் உறுப்புரையின் முதலாம் பந்தியின் கடப்பாட்டுக்கு அமையவும் பிள்ளை அல்லது பெற்றோர் தமது சொந்த நாடு உட்பட எந்த நாட்டையும் விட்டு தமது நாட்டில் பிரவேசிக்கவும் உரிமையுடையவர்களென்பதை அரசதரப்பினர் மதித்தல் வேண்டும். ஏதேனும் நாட்டை விட்டு வெளியேறும் உரிமை. சட்டப்படியான வரையறைகள் மற்றும் தேசிய பாதுகாப்பு, பொது ஒழுங்கு, பொதுச் சுகாதாரம் அல்லது ஒழுக்க விதிகள் அல்லது பிறரின் உரிமைகள், சுதந்திரங்கள் ஆகியவற்றை மீறாததாயும் தற்போதைய ஒருப்பாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் பிற உரிமைகளுக்கு இசைவான தாயும் இருத்தல் வேண்டும்.



**உறுப்புரை 11**

1. பிள்ளைகள் கள்ளத்தனமாக வெளிநாடுகளுக்குக் கடத்தப்படுவதையும் அங்கிருந்து திருப்பி அனுப்பப்படாதிருப்பதையும் முறியடிப்பதற்கான நடவடிக்கைகளை அரச தரப்பினர் மேற்கொள்ளுதல் வேண்டும்.

2.இதன் பொருட்டு அரச தரப்பினர் இரு தரப்பு அல்லது பல தரப்பு உடன்படிக்கைளைச் செய்து கொள்வதையோ அல்லது நிலைபெற்றிருக்கும் உடன்படிக்கைகளை அணுகுவதையோ ஊக்குவித்தல் வேண்டும்.

**உறுப்புரை 12**

1. தானாகவே கருத்துகளை எண்ணித் துணியும் ஆற்றலுள்ள பிள்ளைக்கு அதனைப் பாதிக்கும் எல்லா விடயங்களிலும் தன் சொந்தக் கருத்தை வெளிப்படுத்தும் உரிமையை அரச தரப்பினர் உறுதிப்படுத்துவதுடன், பிள்ளையின் வயதுக்கும் முதிர்ச்சிக்கும் அமைவாக அதன் கருத்துகளை வளர்ந்தோர் உரிய முறையில் சீர்தூக்கிப் பார்க்கவும் வேண்டும்.

2. இதன் பொருட்டு, பிள்ளையைப் பாதிக்கக்கூடிய எந்தவொரு நீதி மற்றும் நிர்வாக விசாரணைகளிலும் நாட்டின் சட்ட நடைமுறை விதிகளுக்கமைய, நேரடியாகவோ பிரதிநிதி ஒருவர் மூலமோ அல்லது தோதான ஒரு குழு மூலமோ தம்பக்கக் கருத்தைத் தெரிவிக்கும் வாய்ப்பு பிள்ளைகளுக்கு வழங்கப்படல் வேண்டும்.

**உறுப்புரை 13**

1.பிள்ளைக்குப் பேச்சுச் சுதந்திரம் இருத்தல் வேண்டும். வாய்மொழி, எழுத்து, அச்சுக்கருவி ஆகியன மூலமோ கலை வடிவத்திலோ அல்லது விரும்பிய மற்றெந்த ஊடகத்தின் மூலமோ எத்தகைய பூகோள எல்லைகளையும் கருத்திற்கொள்ளாது எல்லா வகையான சிந்தனைகள், தகவல்களையும் தேடவும், பெறவும், பிறருக்குப் பரிமாறவும் பிள்ளைக்கு உள்ள சுதந்திரத்தையும் இந்த உரிமை உள்ளடக்குதல் வேண்டும். *(தொடரும்)*

**அன்பார்ந்த மாணவர்களே!**

**உங்கள் வலம்புரியில் திங்கட் கிழமை தோறும் வெளிவரும் 'இன்றைய சறுவர்கள் நாளைய தலைவர்கள்' பகுதியை தவறாது வாசியுங்கள். வெகுமதியான பரிசில்களுடன் உங்களுக்கான போட்டிகள் காத்திருக்கின்றன.**

சிறுவர் பாதுகாப்பு இலங்கை
யாழ்ப்பாணம்

# ICC சர்வதேச கிரிக்கெற் சபை ICC

## INTERNATIONAL CRICKET COUNCIL

11

## பிரட்மனின் அவதாரமா?.... சச்சின்!

இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் டெஸ்ட் போட்டிகளில் 35 சதம் அடித்து உலக சாதனை ஏற்படுத்தியுள்ளார்.



125 டெஸ்ட் போட்டிகளில் 35 சதங்களை அடித்த சச்சின் இதுவரை 34 சதங்களுடன் இதே அணியின் சுனில் கவாஸ்கர் வைத்திருந்த சாதனையை முறியடித்துள்ளார்.

இலங்கையணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் முதல் நாள் ஆட்டம் நிறைவடைய இருக்கின்ற சமயத்திலே சமிந்தவாஸ் வீசிய .பந்தை ஒரு தட்டு தட்டிவிட்டு ஓட்டமெடுத்த பொழுது இச் சாதனை் படைக்கப்பட்டது.

டெஸ்ட் போட்டியில் அதிக சதம் அடித்தோர் பட்டியலில் 125 டெஸ்ட்டுகளில் முறையே 35 சதம் போட்ட சச்சினுக்கும் 34 சதம் அடித்த கவாஸ்கருக்கும் அடுத்த இடத்திலே 32 சதங்களுடன் அவுஸ்திரேலிய முன்னாள் கப்டன் ஸ்ரீவ்வோவ் அடுத்து 31 சதங்களுடன் மேற்கிந்திய அணியின் பிறைன் லாரா அவருக்கு அடுத்தபடியாக 52 டெஸ்டில் 29 சதம் போட்ட டொன் பிரட்மன்.

### இரு அணி வீரர்கள் இரு இனிங்ஸில்....

டெஸ்ட் போட்டியொன்றில் இரு அணிகளிலும் உள்ள வீரர்கள் இரு இனிங்ஸ்களிலும் சதங்கள் பெற்ற சந்தர்ப்பங்களும் நடந்துள்ளன.

இவ்வாறான சந்தப்பம் முதன் முதலில் நிகழ்ந்தது 1946ஆம் ஆண்டாகும். இவ்வாண்டு அவுஸ்திரேலிய இங்கிலாந்து அணிகளுக்கிடையில் அடிலெய்ட்டில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய வீரர் ஆர்தர் மோரிஸ் இரண்டு இனிங்கஸ்களிலும் முறையே 122,124 என்ற ஓட்ட எண்ணிக்கையைப் பெற அதே போட்டியில் எதிரணி இங்கிலாத்தின் பிரபல வீரர் டெனிஸ் கொம்டன் இரு இனிங்ஸ்களிலும் முறையே 147,103 என்ற ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றார்.

இரண்டாவதாக இச்சாதனை நிகழ்த்தப்பட்டது. 27 வருடங்களுக்குப் பிறகாகும். ஆனால் ஒரு வித்தியாசம் இரண்டு இனிங்களிலும் சதம் பெற்றவர்கள் ஒரே அணியைச் சேர்ந்த இரு வீரர்கள். அவர்கள் இருவரும் சப்பல் சகோதரர்கள் 1973 ஆம் ஆண்டு வெலிங்டனில் நடைபெற்ற நியூஸிலாந்துக்கு எதிரான போட்டியில் கிரேக் சப்பில் மற்றும் இயன் சப்பில் ஆகியோர் சதங்கள் பெற்றனர்.

1991ஆம் ஆண்டு ஹமில்டனில் நடைபெற்ற நியூஸிலாந்து - இலங்கை அணிகளுக்கிடையிலான போட்டியில் இலங்கை அணியின் அங்ககுருசிங்க இச்சாதனைக்கு உரித்துடையவரானார். இலங்கை அணியின் இரு இனிங்ஸ்களிலும் குருசிங்க முறையே 119, 102 ஆகிய ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றார். அதேவேளை நியூசிலாந்து அணியின் அன்ரூ ஜோன்ஸ் இரு இனிங்ஸ்களிலும் முறையே 122, 100 என்ற ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றார்.

## வெகுவேகமாக....

| | இனிங்ஸ் | களமிறங்காமல் | அதிகூடிய ஓட்டம் | சராசரி |
|---|---|---|---|---|
| ***1000 ஓட்டங்கள்*** | | | | |
| எச்.சட்ஸிலைவ் (இங்) | 12 | 2 | 176 | 100.00 |
| இ.வீக்ஸ் (மேற். இந்) | 12 | 1 | 194 | 90.90 |
| டொன் பிரட்மன்(அவுஸ்) | 13 | 2 | 254 | 90.90 |
| ஆர்.ஹார்வி(அவுஸ்) | 14 | 5 | 178 | 111.11 |
| வினோத் காம்பிள(இந்) | 14 | 2 | 227 | 83.33 |
| ***2000 ஓட்டங்கள்*** | | | | |
| டொன் பிரட்மன் (அவுஸ்) | 22 | 2 | 334 | 100.00 |
| ஜி.ஹீட்லீ (மேற். இந்) | 32 | 4 | 270* | 71.42 |
| எச்.சட்ஸிலைவ்(இங்) | 33 | 4 | 176 | 68.96 |
| கே.வோஸ்ட்டெர்ஸ் (அவுஸ்) | 35 | 5 | 242 | 66.66 |
| பிறைன் லாரா(மேற்.இந்) | 35 | 1 | 375 | 58.82 |
| ***3000 ஓட்டங்கள்*** | | | | |
| டொன் பிரட்மன் (அவுஸ்) | 33 | 4 | 334 | 103.44 |
| இ.வீக்ஸ் (மேற். இந்) | 51 | 3 | 207 | 62.50 |
| எச்.சட்ஸிலைவ்(இங்) | 52 | 5 | 176 | 63.82 |
| பிறைன்லாரா(மேற்.இந்) | 52 | 3 | 375 | 61.22 |
| ஆர்.ஹார்வி (அவுஸ்) | 54 | 5 | 205 | 61.22 |
| ***4000 ஓட்டங்கள்*** | | | | |
| டொன் பிரட்மன் (அவுஸ்) | 48 | 4 | 334 | 90.90 |
| எச்.சட்ஸிலைவ்(இங்) | 68 | 9 | 194 | 67.79 |
| இ.வீக்ஸ்(மேற்.இந்) | 71 | 5 | 207 | 60.60 |
| விவிலியன் றிச்சுட்ஸ்(மேற்.இந்) | 71 | 5 | 291 | 60.60 |
| ஜே.கொப்ஸ் (இந்) | 75 | 8 | 211 | 59.70 |
| ***5000 ஓட்டங்கள்*** | | | | |
| டொன் பிரட்மன் (அவுஸ்) | 56 | 6 | 334 | 100.00 |
| ஜே.கொப்ஸ்(இங்) | 91 | 8 | 211 | 60.29 |
| கெரி சோபர்ஸ்(மேற்.இந்) | 95 | 12 | 365* | 60.29 |
| சுனில் கவாஸ்கர்(இந்) | 95 | 8 | 221 | 57.47 |
| விவிலியன் றிச்சுட்ஸ்(மேற்.இந்) | 95 | 5 | 291 | 55.55 |
| ***6000 ஓட்டங்கள்*** | | | | |
| டொன் பிரட்மன் (அவுஸ்) | 68 | 7 | 334 | 98.36 |
| கெரி சோபர்ஸ்(மேற்.இந்) | 111 | 16 | 365* | 63.15 |
| டபிள்யூ ஹமொண்ட் (இங்) | 114 | 14 | 336* | 60.00 |
| எல் கட்டன் (இங்) | 116 | 15 | 364 | 59.40 |
| கே.பிறிங்ரன் (இங்) | 116 | 13 | 256 | 58.25 |
| ***7000 ஓட்டங்கள்*** | | | | |
| டபிள்யூ ஹமொண்ட் (இங்) | 131 | 16 | 336* | 60.86 |
| சச்சின் டெண்டுல்கர் (இந்) | 136 | 15 | 217 | 57.85 |
| கெரி சோபர்ஸ் (மேற்.இந்) | 138 | 18 | 365* | 58.33 |
| சுனிஸ் கவாஸ்கர் (இந்) | 140 | 11 | 225 | 54.26 |
| விவிலியன் றிச்சுட்ஸ்(மேற்.இந்) | 140 | 10 | 291 | 53.84 |
| ***8000 ஓட்டங்கள்*** | | | | |
| சச்சின் டெண்டுல்கர் (இந்) | 154 | 16 | 217 | 57.97 |
| கெரி சோபர்ஸ் (மேற்.இந்) | 157 | 22 | 365* | 59.25 |
| ஜாவிட் மியாண்டட் (பாக்) | 162 | 19 | 280* | 55.94 |
| பிறைன் லாரா (மேற்.இந்) | 164 | 5 | 375 | 50.31 |
| சுனிஸ் கவாஸ்கர் (இந்) | 166 | 14 | 221 | 52.63 |
| ***9000 ஓட்டங்கள்*** | | | | |
| பிறைன் லாரா (மேற்.இந்) | 177 | 6 | 375 | 52.63 |
| சச்சின் டெண்டுல்கர் (இந்) | 179 | 17 | 217 | 55.55 |
| சுனிஸ் கவாஸ்கர் (இந்) | 192 | 16 | 236* | 51.13 |
| அலன் போர்டர் (அவுஸ்) | 207 | 38 | 205 | 53.25 |
| ஸ்ரீவ் வோவ் (அவுஸ்) | 216 | 40 | 200 | 51.13 |
| ***10.000 ஓட்டங்கள்*** | | | | |
| சச்சின் டெண்டுல்கர் (இந்) | 195 | 22 | 248* | 57.80 |
| பிறைன் லாரா (மேற்.இந்) | 195 | 7 | 400* | 53.19 |
| சுனிஸ் கவாஸ்கர் (இந்) | 212 | 17 | 236* | 51.28 |
| அலன் போர்டர் (அவுஸ்) | 235 | 43 | 205 | 52.08 |
| ஸ்ரீவ் வோவ் (அவுஸ்) | 244 | 43 | 200 | 49.75 |
| ***11.000 ஓட்டங்கள்*** | | | | |
| அலன் போர்டர் (அவுஸ்) | 258 | 44 | 205 | 51.16 |
| பிறைன் லாரா (மேற்.இந்) | 121 | 8 | 400* | 54.04 |

### மதிய போசனத்துக்கு முன்னால்...

முதல் நாள், இரண்டாம் நாள் மற்றும் மற்ற நாட்கள் அல்லது வெல்வதற்காக இறுதி நேரத்திலும் சதம் அடித்தவர்களைப் பார்த்திருக்கின்றோம், அறிந்திருக்கிறோம்.

ஆனால் மதிய போசனத்துக்கு முன்னால் சதம் அடித்தவர்களை நாம் கேள்விப்பட்டதில்லை.

அவ்வரிசையில் பார்க்கையில் 4 வீரர்களே இவ் வரிசையில் காணப்படுகின்றனர்.

1902 ஆம் ஆண்டு மஞ்செவுரரில் நடைபெற்ற இங்கிலாந்து - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் நடைபெற்ற போட்டியில் அவுஸ்திரேலிய வீரர் வி.நம்பர் 104 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

1926ஆம் ஆண்டு லீட்ஸில் நடைபெற்ற இங்கிலாந்து - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான போட்டியில் அவுஸ்திரேலிய வீரர் சி.மக்கறனி 151 ஓட்டங்களையும் 1930 ஆம் ஆண்டு இதே மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் அவுஸ்திரேலிய வீரர் டொன் பிரட்மன் 334 ஓட்டங்களையும் 1976/77 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஹராச்சியில் நடைபெற்ற பாகிஸ்தான் நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டியில் பாகிஸ்தான் வீரர் மஜிட்கான் ஆட்டமிழக்காமல் 108 ஓட்டங்களைப் பெற்று அடுத்தடுத்து உள்ளனர்.

### அதிக '6'

பங்குபற்றிய போட்டிகளில் கூடுதலான 6 ஓட்டங்கள் (சிக்ஸர்கள்) அடித்த வரிசையில் முதலிடத்தில் இருப்பவர் நியூசிலாந்து வீரர்கிறிஸ்ஹெய்ன்ஸ்முதலிடத்தில்உள்ளார்.

இவர் 87 தடவைகள் (3320 ஓட்டங்கள்) 6 ஓட்டங்களை அடித்துள்ளார்.

இவருக்கு அடுத்தபடியாக அவுஸ்திரேலிய வீரர் அடம்ஸ்கில்கிறிஸ்ற் 85 தடவைகள் (4780 ஓட்டங்கள்) 6 ஓட்டங்களை அடித்துள்ளார்.

மேற்கிந்திய வீரர்களான விவிலியன் றிச்சர்ட்ஸ் 84 தடவையும் (8540 ஓட்டங்கள்) பிறைன் லாரா 78 தடவையும் (11204 ஓட்டங்கள்) அவுஸ்திரேலிய வீரர் மத்தியூ ஹெய்டின் 72 தடவையும் (6672) மேற்கிந்திய வீரர் கிளைவ் லொய்ட் 70 தடவையும் (7515) இங்கிலாந்து வீரர் இயன் மொத்தம் 67 தடவையும் (5200) 6 ஓட்டங்களை அடித்து அடுத்தடுத்துள்ளனர்.

இதேவேளை இலங்கையணியின் முன்னாள் அணித்தலைவரும் ஆரம்பத்துடுப்பாட்ட வீரருமான சனத்ஜெயசூரிய 52 தடவை 6 ஓட்டங்களை (6580) அடித்து இவ்வரிசையில் 16ஆவது இடத்தில் உள்ளார். அத்துடன் முன்னாள் அணித்தலைவர் அச்சுனரணதுங்க 40 தடவை 6 ஓட்டங்களை (5105) அடித்து 25ஆவது இடத்திலும் முன்னாள் உதவி அணித்தலைவர் அரவிந்த டிசில்வா 48 தடவை (6361) 6 ஓட்டங்களை அடித்து 18 ஆவது இடத்தில் உள்ளார். இதேவேளை இந்திய அணி சார்பில் முன்னாள் அணித்தலைவர் கபில்தேவ் 61 தடவை (5248) 6 ஓட்டங்களை அடித்து 11ஆவது இடத்தில் உள்ளார்.

### பவுண்டரிகள் + சிக்ஸ்கர்கள்

ஒரு போட்டியில் பவுண்டரிகள் சிக்ஸ்கள் மூலம் அதிக ஓட்டங்களைப் பெற்றவர்களைப் பார்க்கையில் முதலிடத்தில் இருப்பவர் இங்கிலாந்து அணி வீரர் ஜே.எட்றிச்.

### நோயல்

இவர் நியூசிலாந்து அணிக்கெதிராக 310 ஓட்டங்களைப் பெற்றார். இதில் பவுண்டரிகள் சிக்ஸ்கள் மூலம் 238 (52X4 +5X6) ஓட்டங்களைப் பெற்றார்.

அடுத்து அவுஸ்திரேலிய அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் மத்தியூ ஹெய்டின் சிம்பாப்வே அணிக்கெதிராக 380 ஓட்டங்களைப் பெற்றார். இதில் பவுண்டரிகள் சிக்ஸ்கர்கள் மூலம் 218 (38X4+11X6) ஓட்டங்களைப் பெற்றார்.

பாகிஸ்தான் அணியின் தலைவர் இன்சமாம் - உல்-ஹக் நியூஸிலாந்துஅணிக்கெதிராக 329. ஓட்டங்களைப் பெற்றார். இதில் 38X4+9X6=206 அடங்கும்.

இங்கிலாந்து அணிவீரர் டபிள்யூ ஹமொண்ட் நியூஸிலாந்து அணிக்கெதிராக 336 ஓட்டங்களைப் பெற்றார். இதில் 34X4+10X6=196 அடங்கும்.

மேற்கிந்திய முன்னாள் அணித்தலைவரும் நட்சத்திர துடுப்பாட்ட வீரரான பிறைன் லாரா 400 ஓட்டங்களைப் பெற்றார். இதில் 43X4+4X6=196 அடங் கும்.

இந்திய வீரத் வீரேந்தர் சேவோக் பாகிஸ்தான் அணிக்கெதிர்க 309 ஓட்டங்களைப் பெற்றார். இதில் 39X4+6X6 =192 அடங்கும். (அடுத்த வாரம் தொடரும்)

# தாய்மையும் உள நோய்களும்

**வைத்திய கலாநிதி சி.யமுனானந்தா**

ஒரு தாய்க்கு ஏற்படக்கூடிய உளத் தாக்கங்களை அத்தாய வாழும் சூழலை வைத்தும், வீட்டுத் தரிசிப்பின்போது உள்ள குடுமபச் சூழலை வைத்தும அனுமானிக்கக்கூடியதாக அமைய வேண்டும். மேலும் தாயுடனும குடும்பத்தவருடனும் உரையாடுவதன் மூலமும் அறியக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

மகப்பேற்று சிகிச்சையில் அவதானிக்கக்கூடிய உளநோய்களில் முக்கியமானவை உளப்பிளவு நோயும் (Schiizo Phrenia) சோவும் (Depression) ஆகும்.

### உளப்பிளவு நோய்க்கு உட்பட்டவர்கள்

* நடத்தை மாற்றங்கள்
* நித்திரை இன்மை
* உணவில் நாட்டமின்மை
* ஆட்கள் கதைக்கும் சத்துங்கள் கேட்பதாக நினைத்தல்,
* இல்லாத உருவங்கள் தெரிதல்,
* தனக்குள் கதைத்தல்/ சிரித்தல்,
* கோப உணர்வு என்பவற்றைக் காட்டுவர்.

### சோர்வு நோய்க்கு உட்பட்டவர்கள்

* தற்கொலை முயற்சிகள்
* நித்திரை இன்மை
* வேலையில நாட்டமின்மை
* அழுதல் என்பவற்றைக் காட்டுவர்.

### சமுதாயத்தில் பெண்களின் நிலை

எமது சூழலிலுள்ள பொதுவான பிரச்சினைகளாக.

* போசாக்கு இன்மை.
* பொருளாதார வசதி இன்மை
* போக்குவரத்து இடர்பாடுகள்
* நீர்வசதி குறைவு
* உணவு பெறுவதில் உள்ள சிரமங்கள்.
* உறைவிடப் பிரச்சினைகள்.
* சுகாதார சேவைகள் தடைப்படல் என்பன அமைகின்றன.

சமூகக் கட்டமைப்பில் பெண்களுக்கு முன்னுரிமை அளித்தல் காணப்படுவதில்லை. இதனால் பெண்களில் தாழ்வு மனப்பான்மை ஏற்படுகின்றது.

பெண்களின் திருமணம், பிள்ளைப் பேறு என்பன எப்போது என்று குடும்பத்தலைவனால் தீர்மானிக்கப்படுகின்றது. பெண்களை நோக்கிய வன்முறைகள் குடும்ப ரீதியிலும் பொதுவாகவும் காணப்படுகின்றது. பெண்கள் சமூகத்துடன் இணைந்து வாழும் நிகழ்வு அதாவது முக்கிய நிகழ்வுகளில் முன்னுரிமை அளித்தல் குறைவாக உள்ளது. இவை பெணகள் மருத்துவ சேவையைப் பெறுவதில தடையாக அமைகின்றன. மேலும் பெண்கள் அன்றாட வீட்டு வேலைகள் செய்வதால் மருத்துவ சேவையை நாட நேரம் போதாமல் உள்ளது.

மேலும யுத்தத்தினால் குடும்பத்தலைவனை இழந்த நிலையில் பெண்கள் குடும்பப் பொறுப்பை ஏற்கவேண்டிய சந்தர்ப்பங்கள் அமைகின்றன. இதனால் போசாக்கு இன்மை நோய்த் தொற்றலுக்கு இலகுவில் ஆளாதல் என்பன பெண்களில் காணப்படும்.

### குடும்பத்தில் பெண்களின் நிலை

குடும்பத்தின் கட்டமைப்பின் ஆணாதிக்கம் மேலோங்கிக் காணப்படும். தீர்மானங்கள் எடுத்தல் குடும்பத்தலைவனிடம் இருக்கும. உணவு, மருத்துவ வசதிகள் பற்றிய முன்னுரிமை பெணகளுக்குக் கிடைப்பது குறைவாகவே காணப்படும். எனவே வீட்டுத் தரிசிபபில் குடும்பச் செயற்பாட்டினை அவதானித்து கர்ப்பிணித் தாய்மாருக்கு அளிக்கப்படவேண்டிய முன்னுரிமையை அக் குடும்பத்தின் நம்பிக்கைகள் ஊடாக வெளிப்படுத்தல் வேண்டும்.

பொதுவான குடும்பப் பிரச்சினையாக மதுபானப் பாவனை அமைகின்றது. இதற்கு அறிவு சார்ந்த முறையில் விளக்குதல் அவசியம். மதுபான பாவனையால்,

* பொருளாதாரக் கஷ்டம்
* நோய்க்கு உட்படல்
* குடும்பச் சண்டைகள்
* விபத்துக்குகட்படல்
* கடனுக்கு ஆளாதல் போன்றன காணப்படும். எனவே குடிகுடியைக் கொடுக்கும் தன்மையைத் தெளிவுபடுத்த வேண்டும்.

### மகப்பேற்றுக்கு முன்

கருத்தரித்த தாய்மார்கள் பலவகையான உளத்தாக்கர் திற்கு ஆளாகலாம். கருத்தரிப்ப உள நெருக்கீட்டிற்கான காரணியாக அமையலாம்.

* முதலாவது கருத்தரிப்பு
* வேண்டப்படாத கருத்தரிப்பு
* எதிர்பாராத கருத்தரிப்பு
* திருமணத்திற்கு முந்திய கருத்தரிப்பு
* திருமணத்திற்கு புறம்பான கருத்தரிப்பு.
* விபச்சாரக் கருத்தரிப்பு
* உளநோயாளியின் கருத்தரிப்பு

என உள நெருக்கீடுகள் ஏற்படலாம். இதில் முதலாவது கருத்தரிப்பு தவிர ஏனையவை சட்டவிரோத கருக்களைப்பு முயற்சி செய்து தவறியவையாகவும் அமையலாம். இந்நிலையில் தாய்மாரில பதகளிப்பு நோய், சோர்வு, தற்கொலை முயற்சி என்பன காணப்படலாம். இவர்களுக்கு உளவளத்துணை அளித்தல் அவசியம்.

உளநோயாளிதள் கருத்தரித்தால் அவர்கள் உபயோகிக்கும் மருந்துகள் வைத்திய ஆலோசனைப்படி குறைக்கப்படல் அல்லது மாற்றப்படல் வேண்டும். மருந்துகள் எடுத்தலை தவிர்த்தல் சில வேளைகளில் உள நோயினை ஏற்படுத்திவிடும். **Schizophrenia** நோயாளிகள் பொதுவாக லார்கக்டில் (**Largactil**) மருந்து வைத்திய ஆலோசனைப்படி எடுக்கலாம். ஆனால் இம்மருந்து குருதி அமுக்கத்தைக குறைக்கும் என்பதில் அவதானமாக இருக்கவேண்டும். **Mania** நோயாளிகள் **Lithium (Camcolit)** என்ற குளிசையை கருத்தரித்த பின் எடுத்தலைத் தவிர்த்து வைத்திய ஆலோசனைப்படி வேறு குளிசையை எடுக்கலாம். பாலூட்டும் போதும் இதனையே பின்பற்ற வேண்டும்.

### மகப்பேற்றுக்குப் பின்

பிள்ளை பெற்று 3 நாடகளில் **Post Partum Blues** என்னும் மனத்தளர்வு நிலை 50% தாய்மார்களில் ஏற்படுகின்றது. இதைத தவிர அரிதாக மகப்பேற்றுக்குப் பின் ஏற்படக்கூடிய உளநோய்கள் மனச்சோர்வு நோயும் (**Depression**) மகப்பேற்றுக்குப் பின்னான உளப்பிளவு நோயும் ஆகும. இதனால் பாதிக்கப்பட்டவாகள்.

* குழந்தைக்குப் பாலூட்டாமை
* நித்திரையின்மை.
* உணவில் நாட்டமின்மை
* தங்களை பராமரிக்கும் தன்மை அற்றிருப்பர்.

சோர்வு நோய்க்குட்பட்டவர்கள் தற்கொலை முயற்சியில் ஈடுபடலாம். பிள்ளையையும் கொல்ல முயற்சிக்கலாம். சோர்வு நோய்க்கு உட்பட்டவர்களுக்கு உள மருத்துவரின் சிகிச்சை அவசியம். பொதுவாக சோர்வை அகற்றும் மருந்துகள் உளவைத்தியரால் சிபாரிசு செய்யப்படலாம்.

உளப்பிளவு நோக்குட்பட்டவர்கள் விசித்திரமான நடவடிக்கையில் ஈடுபடலாம் இவர்கள் உளமருத்துவரிடம் சிகிச்சை பெற வேண்டும். **Largactil** குளிசை (25mg இரவு) சில வேளைகளில மின்வலிப்புச் சிகிச்சையும் தேவைப்படலாம்.

மேலும் ஆண் குழந்தையை எதிர்பாாத்தபோது பெண் குழந்தை பெறலாம். பெண்குழந்தையை எதிர்பார்த்தபோது ஆண் குழந்தையைப் பெறலும் உளத்தாக்கத்தை ஏற்படுத்த வலலன.

எனவே, சுகாதார உத்தியோகத்தர்கள் தாய், குடும்பம், அவர் வாழும் சூழல் என்பவற்றை உணர்நது, புரிந்துணர்வுடன் சேவையாற்றி தாய்மார்களில் ஏற்படக்கூடிய உளப்பாதிப்புக்களைக் குறைக்கலாம். அல்லது உளப்பாதிப்புற்றவர்களை ஆரம்பத்தில் இனம்கண்டு உளவளத்துணை சிகிச்சையாளரிடமோ/ உள நோய் வைத்தியரிடமோ அனுப்பலாம்.

நன்றி சுகமஞ்சரி

---

# கஷ்டப்பிரதேச ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பவு வழங்கப்படவில்லை

வடக்கு-கிழக்கு மாகாண பாடசாலைகளில் கடமைபுரியும் அதிபர், ஆசிரியர்களுக்கு இந்த ஆண்டுக்கான கஷ்டப்பிரதேச ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்படவில்லை என்று சம்பந்தப்பட்ட ஆசிரியர்க்ள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கஷ்டப்பிரதேசத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு விஷேட ஊக்குவிப்புக கொடுப்பனவாக ஆயிரத்து 500 ரூபாவும், அதி கஷ்டப் பிரதேச ஆசிரியர்களுக்கு 2 ஆயிரத்து 500ரூபாவும் மாதாநதம் வழங்கப்படு மென்று கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

இந்த ஆண்டு ஜனவூரி மாதம தொடக்கம் இக்கொடுப்பனவு வழங்கபபடும் என்று அறிவிக்கப்பட்ட போதிலும் 11 மாதங்களாகியும் இதுவரை அவை வழங்கப்கப்படவில்லை என்று ஆசிரியர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

வடக்கு-கிழக்கு மாகாண கல்வியமைச்சின் கீழ் இயங்கி வரும் பெரும்பாலான பாடசாலைகள் கஷ்டப்பிரதேசங்களிலும அதி கஷ்டப்பிரதேசங்களிலுமே இயஙகிவருகின்றது.

இவ்வாறான பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர் ஆசிரியர்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடனும் இடமாற்றக் கொள்கையை பினபற்றும் வகையிலும் விசேட கொடுப்பனவுத்திட்டம் அறிவிக்கப்பட்டது.

எனினும் இந்த ஆண்டு இதுவரை எவ்வித கொடுப்பனவும் வழங்கப்படாததால் அடுத்த ஆணடுக்கான ஆசிரியர் இட மாற்றங்களை மேற்கொள்வதில் சிக்கலகள் எதிர்நோக்கப்படுவதாக கல்விப் பணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (த-9)

---

# மரணதண்டனையை அமுல்படுத்த ஜனாதிபதி தீவிர ஆலோசனை

பாரிய குற்றச்செயல்களைத் தடுக்க மரணதண்டனையை மீணடும் அமுல்படுத்துவது தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கவனம் செலுத்தியுள்ளதாக நீதி மற்றும் நீதிமறுசீரமைப்பு அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார்.

இவ்விடயங்கள் தொடர்பாக விசேட பேச்சுவார்த்தை யொன்று அடுத்தவாரத்தில் ஜனாதிபதி தலைமையில் நடைபெறவுள்ளது. இக்கலந்துரையாடலில், சட்டமா அதிபர் திணைக்களம், நீதியமைச்சு, நீதிபதிகள் சங்கம ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலநதுகொள்ளவுள்ளதாக அவா தெரிவித்தார்.

இந்நிலையில் மரணதண்டனையை மீண்டும் அமுல்படுத்துவது குறித்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு விருப்பம் தெரிவித்துள்ளார் எனக் குறிப்பிட்ட அமைச்சர், மரண தண்டனையை அமுல்படுத்துவது தொடர்பாக அவரால் பல ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

1978ஆம் ஆண்டு இலங்கையில் மரணதண்டனை இடைநிறுததப்பட்டது. இதே வேளை இலஙகையல் 86 பேருக்கு மரணதண்டனைக்கான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில் 57பேர் வெலிக்கடை சிறைச்சாலையிலும் 27 பேர் கணடி போகம்பரை சிறைச் சாலையிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.(ச-4)

---

# திருவாசக முற்றோதல்

தென்மராட்சி திவ்விய ஜீவன சங்கத்தினரின் திருவாசக முற்றோதல் எதிர்வரும் 15-12-2005 வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு சாவகச்சேரி கற்குழி கந்தசாமி ஆலயத்தில் இ.கயலேஸவரன் தலைமையில் நடைபெறும்.

அத்துடன் சாவகச்சேரி வாரிவள முத்துமாரி அம்மன் ஆலயத்திலும் சிவஸ்ரீ த.வீரபத்திரக் குருக்கள் ஆசியுரையுடனும் நடைபெறும் சிவ தொண்டர் க.சி.ஆறுமுகம் நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தவுள்ளார். (த)

---



## உலகம் வியந்த உயர்ந்த அருட்கவி

நிலவும் தர்மத்தின் காவலனாய்
நிஜமாய் எழுந்த அருட்கவியே
புலரும் பொழுது க(ளெல்லாம்)
புதுமையாய் கவிமழை பொழிந்த கவியே
உலகம் தொழுகின்ற இறையாய்
உயர்ந்து எழுந்த அருட்கவியே
பலரும் புகழும் உலகத்தின் பாவலனே
பாரினை நீத்து எங்கு சென்றாய் ஐயா!

மதுரகவி வி.காரை எம்.பி.அருளானந்தன்

---

# வேலைவாய்ப்பற்றோரைக் கணக்கெடுக்கும் பணிகள் 2006 ஜனவரியில் ஆரம்பம்

(கொழும்பு)

வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு மஹிந்த சிந்தனையின் அடிப்படையில் வேலை வாய்ப்புக்களை வழங்குவதற்கான வேலைத்திட்டம் ஒன்றை வகுப்பதற்காக வேலை வாய்ப்பற்றோர் கணக்கெடுப்பொன்றை 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம தொடக்கம் மேற்கொள்ளத் திட்டமிட்டிருப்பதாக புள்ளிவிபரத்திணைக்க ளத்தை சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு -கிழக்கு மாகாணம் உட்பட நாடு பூராகவும் ஏக காலத்தில் இக்கணக்கெடுப்பு பிரதேச செயலாளர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள் ஆகியோர்களின் துணையுடன் நடாத்தப்படும்,

இக் கணக்கெடுப்பு க.பொ.த (சாதாரணதரம் )க.பொ.த (உயர் தரம்,பட்டப் படிப்பு, 08 ஆம் தரமும அதற்கு மேல் என்ற அடிப்படையிலும் நடாத்தப்படும்

வழமையாக இவ்வாறான கணக்கெடுப்புக்கள் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் நடத்தப்படுகின்ற போதிலும் கடந்த வருடம் ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாக 2005 ஆம் ஆண்டில் நடத்தப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனினும் தற்போது மஹிந்த சிந்தனையை அமுல்படுத்தும் நோககில் எதிாவரும் ஆண்டு ஜனவரிமாதம் இககணககெடுப்பு நடத்தத்திட்ட மிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-7)

---

# திருத்தப்படாத வீதி; பயணிப்பதில் சிரமம்!

(பொன்னாலை)

பருத்தித்துறை-கற்கோவளம் கடற்கரை வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாது இருந்து வருகின்றது. இதனால் அப்பகுதி மக்கள் பெரிதும் சிரமம் அடைந்துவருகின்றனர்.

இந்தக் கடற்கரை வீதி ஆழிப்பேரலை இடம் பெறுவதற்கு முன்னரே குன்றும், குழியுமாக காட்சியளித்தது. பின்னர் ஆழிப் பேரலை அனர்த்தம், தொடரும் பருவகால மழை ஆகியவற்றால் மேலும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றது.

பாடசாலை மாணவர்கள், கடற்றொழிலாளர்கள், உத்தியோகத்தர், பொதுமக்கள் எனப் பலரும பயன்படுத்திவரும் இவ்வீதியை மிக விரைவில் புனரமைத்துத தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(த-49)

# தீவிரவாதிகளின் கெடு முடிந்தது; 4 பணயக் கைதிகளின் நிலை என்ன?

(பக்தாத்)

ஈராக்கில் மறுசீரமைப்பு பணிகளில் ஈடுபட்டுவரும் வெளிநாட்டு பயணிகளை சதாம் உசேன் ஆதரவு தீவிரவாதிகள் பணய கைதிகளாக கடத்திச்சென்று கொலை செய்வது வாடிக்கையாகி விட்டது.


கடந்த சில நாட்களுக்கு முன்பு பக்தாத் நகரில் மறுசீரமைப்பு பணிகள் மற்றும் சமூக சேவைகளில் ஈடுபட்ட 4வெளிநாட்டவர்களை தீவிரவாதிகள் துப்பாக்கி முனையில் கடத்திச்சென்றனர். இவர்களில் 2பேர் அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள். ஒருவர் இங்கிலாந்தை சேர்ந்தவர். இன்னொருவர் கனடாவை சேர்ந்தவர்.

அநத 4 பேரையும் விடுதலைசெய்ய வேண்டுமானால் ஈராக்கில் இருந்து வெளிநாட்டு படையினரும் மற்ற அமைப்பினரும் உடனடியாக வெளியேற வேண்டும் என்று கெடுவிதித்தனர். கோடிக்கணக்கில் பணயத்தொகையும் கேட்டனர்.

தீவிரவாதிகள் விதித்த 'கெடு' நேற்று முன் தினத்துடன் முடிநதது. இதைத் தொடர்ந்து அந்த 4 பேர் கதி என்ன? அவர்கள் தலைதுண்டித்து கொலை செய்யப்பட்டார்களா? என்ற எந்த தகவலையும் தீவிரவாதிகள் தெரிவிக்கவில்லை. பயண கைதிகளை விடுதலை செய்யுமாறு அவர்களது உறவினர்கள் தொடாந்து தீவிரவாதிகளுக்கு வேண்டுகோள் விடுத்த வண்ணம் உள்ளனர்.

இந்த நிலையில் தீவிரவாதிகள் கடந்த சில நாட்களுக்கு முன்பு கடத்திச் சென்ற எகிபது பயணியை தலை துண்டித்து கொலை செயதனர். சதாம் உசேனின் சொந்த ஊரான திக்ரித் அருகே முகமது இப்ராகிம் அல் ஹிலாலி என்ற அந்த 46 வயது எகிப்தியரின் உடல் கண்டுபிடிக்கப்பட்டது. (த)

WORLD NEWS
உலக தரிசனம்



டெல்லியில் நேற்று முன்தினம் 40ஆவது இந்தியத் தொழிலாளர் கருத்தரங்கு நடைபெற்றது. இக்கருத்தரங்கை பிரதமர் மன்மோகன் சிங், தொழில்துறை அமைச்சர் சந்திர சேகர் ராவ் ஆகியோர் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைக்கும் காட்சி.

# கின்னஸில் இடம்பிடித்தார் 116 வயதான மூதாட்டி

உலகின் மிக வயதான பெண்மணி என கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம பிடித்துள்ளார். ஈக்வடோர் நாட்டைச் சேர்ந்த 116வயது மூதாட்டி ஈக்வேடோர் நாட்டின் மேற்குப் பகுதியில் வசிப்பவர் மரியா இஸ்தர்கபோவில்லா. இவருக்கு 116 வயதாகிறது. 1889ஆம் ஆண்டு செப்டம்பர் 14 திகதி பிறந்தவர். இவருக்கு ஐந்து மகன்கள் உள்ளனர்.

கணவர் 1949ஆம் ஆண்டு இறந்து விட்டார். தற்போது மகன், மருமகளுடன் வசித்துவருகிறார். நான்கு பேரக் குழந்தைகள், ஒன்பது கொள்ளு பேரக் குழந்தைகள்,இரண்டு எள்ளு பேரக் குழந்தைகள் ஆகியோர் உள்ளனர்.

இதறகு முன் 'உலகின் மிக வயதான பெண்மணி' என்ற கின்னஸ் சாதனையை அமெரிக்க மூதாட்டி ஒருவர் பெற்றிருந்தார். தற்போது மரியா இஸ்தர் பற்றி அவரது உறவினர்கள் பிறப்பு சான்றிதழ், திருமண சான்றிதழ் ஆகியவற்றை கின்னஸ உலக சாதனை புத்தக அமைப்புக்கு அனுப்பிவைத்தனர். இதையடுத்து, 'உலகின் மிக வயதான பெண்மணியாக மரியா இஸ்தரை கின்னஸ் அமைப்பு நேற்று முன தினம் அறிவித்தது. தற்போது அவர் நல்ல உடல் நலத்துடன் இருக் கிறார். 'டிவி' பார்க்கிறார். பத்திரிகைகள் படிக்கிறார். அந்த அளவுக்கு கண்பார்வை தெளிவாக உள்ளது. கைத்தடி உதவி இல்லாமல் நடக்கிறார்.

இதுகுறித்து கின்னஸ் அமைப்பின் மேலாளர் கேதே வொயிட் கூறியதாவது, மரியா இஸ்தர் பற்றி இதற்கு முன் நாங்கள் கேள்விப்பட்டது இல்லை. கின்னஸ் உலக சாதனை பட்டத்தை வென்றுள்ளார் என்ற விஷயத்தை தற்போது தான் மரியா இஸதருக்கு தெரிவித்துள்ளோம். அவரது நெடிய வாழ்க்கை பயணத்தில் முக்கியமாக கருத்து மாற்றங்களை குறித்து அவரிடம் கேட்டோம்.

தினமும் காலையில் எழுந்ததும் உயிருடன் உள்ளதற்காக கடவுளுக்கு நன்றி தெரிவிப்பேன். ஆண்களை நம்பி தாங்கள உள்ளோம் என்பதை பெண்கள் ஏற்றுக் கொள்கின்றனர் என்ற வாதத்தை நான் ஏற்க மறுக்கிறேன் என்றார். எனத் தெரிவித்தார். (த)

# நைஜீரிய விமானம் விபத்து 103 பேர் பலியாகினர்

நைஜீரியா நாட்டு ஜெட்லைனர் விமானம் விபத்துக்குள்ளானதில் 103பேர் பலியானார்கள். மோசமான காலநிலை தான் இந்த விபத்துக்குக் காரணமாகும்.

சோசோலிசோ ஏர்லைன்ஸ் டி.சி-9 என்ற ஜெடலைன் விமானம் 110 பேர்களுடனும் அபுஜாவில் இருந்து துறைமுக நகர் ஹார்கோர்ட்டுக்கு புறப்பட்டுச் சென்றது. விமானம் லகோஸ் நகரம் அருகே வந்து கொண்டிருந்த போது விமானம் விபத்துக்குள்ளானது. அதில் பயணம் செய்த 119பேர்களில் 103பேர் பலியானார்கள் மற்றும் 7 பேர் படுகாயத்துடன் உயர்த்தப்பினர் என்று நைஜீரியா, நாட்டு சிவில் விமான போக்குவரத்து ஆணை அதிகாரி சாம் அடுரோக்யே தெரிவித்தார்.

விமானம் விபத்துக்குள்ளாகி மோதி நொறுங்கியதில் உயிரிழந்தவர்களின் உடல்கள் சிதறிக்கிடந்தன என்று விமான நிலைய ஊழியர் ஒருவர் கூறினார். பலியானவர்களின் உடல்கள் கருகிவிடடதால் அடையாளம் தெரியவில்லை. உயர் பிழைத்த 7பேர் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுவருகிறது. அவர்கள் 7பேரும் சுகம் அடைந்து வருவதாக, அதிகாரி சோசோலிசோ தெரிவித்தார். (த)

# உலக அழகியாக மிஸ் ஐஸ்லாந்து

சீனாவில் நடந்த 2005ஆண்டுக்கான உலக அழகிப் போட்டியில் ஐஸ்லாந்து நாட்டு அழகி உலக அழகியாக மகுடம் சூட்டப்பட்டார்.

சீனாவில் தெற்கு பகுதியில் கடற்கரை சுற்றுலாத்தலமான சான்யாவில் உலக அழகிப் போட்டி நடந்தது. இதில் இந்தியா உட்பட உலகில் உள்ள 102. நாடுகளை சேர்ந்த அழகிகள் இந்த போட்டியில் கலந்துகொண்டனர். இந்தியாவின் சார்பில் சிந்தூரா காட்டே இப்போட்டியில் கலந்துகொண்டார். உலகம் முழுவதும் மிகவும் ஆவலாக எதிர்பார்க்கப்பட்ட உலக அழகி போட்டியின் இறுதி போட்டி நேற்று முன்தினம் நடந்தது.

இதில் ஐஸ்லாந்து நாட்டு அழகியான உன்னூர் பிர்னா வில்ஹிஜால டோட்டிர் உலக அழகியாக மகுடம் சூட்டப்பட்டார். மெக்சிகோ நாட்டு அழகியான டாப்னி மோலினா லோனா இரண்டாவது இடத்தையும் மிஸ் பியூர்ட்டோரிக்கோ அழகியான இன்கிரிட் மேரி ரிவேரா சான்டோஸ் மூன்றாம் இடத்தையும் பிடித்தார்.

புதிய உலக அழகியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உன்னூர் பிர்னா, பகுதி நேர பொலிஸ் அதிகாரியாக பணியாற்றி வருகின்றார். இவருக்கு வக்கீலாக வேண்டும் என்ற ஆசையும் இருக்கிறது. மிஸ் வேர்ல்டு அழகி போட்டியின் தலைவரான




ஜீலியா மோர்லி தலைமையிலான ஒன்பது உறுப்பினர்கள் கொண்ட குழுவினர் உலக அழகியை தேர்ந்தெடுத்தது. (த)

# இந்தியாவிலிருந்து அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதிசெய்ய பாகிஸ்தான் விருப்பம்

இந்தியாவிலிருந்து அத்தியாவசிய பொருட்களை அதிகளவில் இறக்குமதி செய்வதற்கு பாகிஸ்தான் விரும்புகிறது. இதற்காக தன்னுடைய நாட்டின் வர்த்தகர்களுக்கு விசா விதிமுறைகளில் தளர்வு செய்யவேண்டும் என்று இந்தியாவை எதிர்பார்க்கிறது பாகிஸ்தான். மேலும் வாகா-அட்டாரி எல்லைப் பகுதியில் இறக்குமதி நிலையங்களை அமைக்கவேண்டும் என்றும் பாகிஸ்தான் விரும்புகிறது.

இந்தியா-பாகிஸ்தான் நாடுகளிடையே பதற்றம் குறைந்து தற்போது பல்வேறு மட்டத்தில் உறவு மலர்ந்து வருகிறது. இருநாடுகளிடையே விமானப் போக்குவரத்து, ரயில்போக்குவரத்து, பஸ் போக்குவரதது எல்லாம் ஏற்பட்டுள்ளன. மேலும வர்த்தக ரீதியிலும் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

சமீபத்தில் காஷ்மீரிலும், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரிலும் மற்றும பாகிஸ்தானிலும் பூகம்பம் ஏற்பட்ட போது இந்தியா வலியச் சென்று உதவியது. பாகிஸ்தானிற்கு நிவாரணப் பொருட்கள் மூன்று முறை டன்கணக்கில் அனுப்பப்பட்டன. நிதியுதவியும் அளிக்கப்பட்டது. இப்படியாக இருநாடுகளிடையே தற்போது உறவு மலர்ந்து வருகிறது.

இந்நிலையில் தன்னுடைய நாட்டின் இறக்குமதியாளர்களுக்கான விசா விதிமுறைகளை இந்தியா மேலும் எளிமையாக்க வேண்டும் என்று பாகிஸ்தான் விரும்புகிறது. அத்தியாவசிய பொருட்களை இந்தியாவிலிருந்து அதிகளவில் இறக்குமதி செய்ய பாகிஸ்தான் விரும்புகிறது. இதற்காக ஏற்கனவே வெங்காயத்தின் மீதான இறக்குமதி, இறைச்சிப் பொருட்கள், விலங்குகள், உருளைக்கிழங்கு, முட்டைக்கோஸ் போன்ற பொருட்களுக்கான இறக்குமதி மீதான தடையை பாகிஸ்தான் இரத்து செய்துவிட்டது.

இதன் விலைகளை கட்டுப்படுத்து வதற்காக இப் பொருட்கள் மீதான இறக்குமதி வரியையும் பாகிஸ்தான் நீக்கி விட்டது. 3 மாதங்களுக்கு முன்பு சர்க்கரை இறககுமதி மீதான தடையையும் பாகிஸ்தான் ரத்துச் செய்துவிட்டது. இந்நிலையில் பாகிஸ்தானில் பல்வேறு அமைச்சகங்களின் மூத்த அதிகாரிகள இஸ்லாமாபாத்தில் கூடி ஆலோசனை நடத்தினார்கள்.

அப்போது வாகா எல்லை வழியாக (தரை வழி) இறக்குமதியை அதிகரிப்பதுபற்றி இவர்கள் ஆலோசனை நடத்தினார்கள். எல்லையில் இறக்குமதி மையங்களை நிறுவுவது என்றும அப்போது முடிவு செய்யப்பட்டது. (த)





இநதிய பெருங்டகலில் உள்ள காமோரோ தீவின் எரிமலை கடந்த இரண்டு வாரங்களாக நெருப்புக் குழம்பை வாரியிறைத்து வருகிறது. இந்த எரிமலை கக்கிய சாம்பல் துகள்கள் இங்குள்ள நீர்நிலைகளை மாசுபடுத்தியுள்ளது. இதனால் தலைநகர் மரோனியில் உள்ள ஒருலட்சத்து 70 ஆயிரம் மக்கள் சுத்தமான குடிநீர் கிடைக் காமல தவிக்கின்றனர்.

# ஆப்கானில் தாக்குதல் 9 பொலிஸார் பலி

ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகள் நடத்திய இரண்டு வெவ்வேறு தாக்குதல சம்பவங்களில் ஒன்பது பொலிஸார் சுட்டுக்கொல்லப்பட்டனர். கடந்த வாரம் 24தலிபான்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்திற்கு பழிக்குப் பழிவாங்கும் வகையில் தீவிரவாதிகள் இந்த தாக்குதலை நடத்தியுள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் காந்தகாரின் தெற்கு பகுதியான ஹெல்மாண்டில் உள்ள ஹஜர் ஜோப்ட் மாவட்ட பொலிஸ் தலைமையகம் மீது 12க்கு மேற்பட்ட தலிபான தீவிரவாதிகள் நேற்று முன்தினம் திடீர் தாக்குதல் நடத்தினர். இதில் ஏழு பொலிஸார் சுடடுக்கொல்லப்பட்டனர். பொலிஸார் திருப்பித் தாக்கியதில் ஐந்து

தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். பக்ரான் மாவட்டத்தில் நடந்த மற்றொரு தாக்குதலில் இரண்டு பொலிஸாரை தீவிரவாதிகள் சுட்டுக்கொண்டனர். ஹஜா ஜோப்ட் மாவட்டத்தில் நடத்த தாக்குதலின போது ஆறு பொலிஸ் அதிகாரிகளும் காயமடைந்ததாக அம்மாவட்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (த)

ஒளி விளக்குகள் வைத்திருப்போர் மற்றவர்களுக்கு அவற்றை வழங்கிச் செல்வார்களாக!

- பிளேட்டோ

**வலம்புரி**

## நடமாடும் தெய்வமாகி நம்மை வழிப்படுத்திய ஞானவிளக்கு

அளவெட்டியூர் அருட்கவி விநாசித்தம்பிப் புலவர் என்றால் அறியாதார் யாரும் இல்லை.

சைவத்திற்கும் தமிழிற்கும் அற்புதப்பணி புரிந்த அருட்கவி அவர்கள் நேற்று அதிகாலையில் ஸ்தூலம் நீத்தார் என்ற செய்தி நம் இதயத்தின் துடிப்பை நிறுத்துவதாய் அமைந்துள்ளது.

அருட்கவி விநாசித்தம்பிப் புலவரிடம் சென்று அவரை வணங்கி ஆசி பெற்று வாழ்க்கையில் தேறியவர்கள் பல ஆயிரம்பேர். அவர்கள் எல்லோரும் அருட்கவியின் இழப்பில் துன்புற்றுள்ளனர்.

கருவிலே திருவுற்றவராக இறையருள் பெற்ற புலவர் அவர்கள் தன் வாக்கினால் ,மெய்யினால் மனத்தினால் தன்னை நாடி வரும்அன்பர்களை ஆற்றுப்படுத்தியவர். உளவியல் என்ற சிந்தனையை உலகம் அதிகமாகத் உணரத் தொடங்கிய காலத்துடன் ஒப்பிடுகையில் அருட்கவி ஐயாவின் உள வியல் உணர்வு முதன்மையானது.

தெய்வீகத்துடன் உளவியலை இணைத்து அதன் ஊடாக ஆற்றுப்படுத்திய அவரின் அற்புதப்பணி யால் தேர்ச்சி பெற்றவர்கள் ஏராளம்.

அருட்கவி விநாசித்தம்பிப் புலவர் இருக்கின் றார் என்ற நம்பிக்கையில் தன் வாழ்வினை வெற்றிகரமாக முன்னெடுப்பவர்களுக்கு அவர் நடமாடும் தெய்வமாகவே காட்சி கொடுத்தார்.

முதலீடாயினும் வர்த்தகப்பணியாயினும் கல்வி முயற்சி ஆயினும் வெளிநாட்டுப் பயணமாயி னும் இல்லறத்தின் இணைவாயினும் அருட் கவியிடம் ஆலோசனை பெற்று அவரின் வழி காட்டலை பின்பற்றியவர்கள் தம் வாழ்க்கையில் வெற்றி பெற்றனர்.

தனித்து உளவியல், இறையியல் என்பதுடன் நின்று விடாது சித்த மருத்துவத்தினூடாகவும் நோய் தீர்க்கும் ஐயனாக அவர் விளங்கினார்.

ஆசிரியப் பணியை ஆற்றிய புலவர் அவரிடம் இருக்கக்கூடிய 'ஆசுகவி' பாங்கு அதிசயிக்கத்தக்கது.

ஆசுகவி என்பது கூறுவது அவரின் திறமைக் கான ஒப்பிடுகையாக இருக்காது என்பதனாலேயே 'அருட்கவி' என்று அவரை எல்லோரும் அழைத் தனர்.


அருட்கவியின் ஆசியால் வீசிய தெய்வீகம் நம் மண்ணை-மக்களை புனிதப்படுத்தியது. இந்த மண்ணிற்கு அவர் தந்த நூல்கள் ஏராளம். அவ ரின் அருட்புகழ் மாலைகள் ,தெய்வீக மணம் வீசும் திருப்புகழுக்கு ஒப்பானவை.

அவரின் சைவத்தமிழ்ப் பணிக்காக யாழ்.பல் கலைக்கழகம் கௌரவ முதுகலைமாணிப்பட்டத் தை வழங்கி, தான் பெருமைப்பட்டுக்கொண்டது.

நம் கண்ணெதிரே நடமாடிய அந்த மனிதத் தெய்வம். மானிடத்தை வழிப்படுத்திய ஞான விளக்கு.முன்னே பிரகாசித்த அந்த ஞானவிளக்கு மறைந்ததாயினும் அவ் ஆன்மா சோதியுடன் கலந்த சோதியாகி நம்மையெல்லாம் ஆற்றுப் படுத்தும் ,வழிகாட்டும் என்ற நம்பிக்கையில் அவர் திருவடிகள் பணிவோம்.

# 50 ஆண்டுகளுக்கு பிற்பட்ட நிலைமைகளை கனவில் இருத்திச் செயற்படுகின்றார் மஹிந்த

## கா.வே.பாலகுமாரன்



(கிளிநொச்சி)

உலக வரலாற்றில் விடுதலைக்கு போராடுகின்ற இயக்கங்களுக்கு நிபந்தனை விகித்த நிலைமாறி முதல் முறையாக இலங்கையில் ஒடுக்கும் தரப்பாக உள்ள சிங்கள தேசத்திற்கு நோர்வே நிபந்தனைகளை விதித்தி ருபபது குறித்து விடுதலைப் புலிகள் பெரு மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

'புலிகளின் குரல்'வானொலியின் அரசியல் அரங்க நிகழ்வில் விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் கா.வே.பாலகுமாரன் இன்றைய அரசியல் நிலைமைகள் தொடர்பாக கடந்த சனிக்கிழமை ஆற்றிய உரையில் இது குறித்துத் தெரிவிக்கையில்,

தமிழீழமென்கின்ற தமிழ்த்தேசம் மற்றும் சிறிலங்கா என்கின்ற சிங்களதேசத்தினுடைய நிலைப்பாடுகள் தெளி வாக தற்போது சர்வதேசத்தின் முன்பாக வைக்கப்பட் டுள்ளது. தலைவரின் மாவீரர் நாள் உரையை இனி ஒவ்வொருநாளும் வரக்கூடிய செய்திகளோடு பொருத்திப பார்க்கின்ற வகையிலே சூழ்நிலை அமையு மென்பது எங்களது கருத்து.

இப்போது எவர் எதைக் கூறினாலு தலைவரது மாவர்ர் நாள் உரையை மேற்கோள்கா ்த்தான் கூறுகின்ற நிலையில் அந்த உரை ஒரு தெளிவான பட்டயமாக இருக் கிறது.மஹிந்த பதவியேற்று ஏறத்தாழ இரண்டுவாரங்கள் ஆகின்றன. அலரி மாளிகை இப்போது மிகப் பரபரப்பாக இருக்கிறது. நாளாந்தக் கூட்டங்களும் சந்திப்புகளு மாக அது இருக்கிறது. மிகப்பெரிய அரசியல் முடிவினை எடுத்துச் செயல்படுவது போலவும், மிகவும் ஒரு பாரிய பொருளாதார நகர்வுத்திட்டத்தை முன்வைக்கவுள்ளது போலவும் ஏதோ ஒரு இராணுவ ரீதியான அற்புதமான திடடத்தை கைவசம் வைத்துக்கொண்டு செயல்படுவது போலவும் ஒரு மிகப்பிரமாண்டமான தோற்றத்தைக் கொடுப்பதற்காக நாள்தோறும் மஹிந்த படுகின்ற பாடு சொல்லும் தரமன்று.

1977ஆம் ஆண்டு பொருண்மிய ரீதியாக இலங்கை திறந்த பொருளாதார முறைக்குச் சென்றதற்கு அப்பால் மிக நீண்டகாலமாக தமிழ் மக்களை அழிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட போரினது உச்ச விளைவுகளுக்கு அப்பால இன்று தேசம் எங்கே நிற்கிறது? என்பதை பொருட் படுத்தாது அதை கணக்கிலெடுக்காத ஏறத்தாழ 50ஆண்டு களுக்கு பின்னைய நிலைமைகளை கனவிலே இருத்திக் கொண்டு காரியங்களை ஆற்றுகிறார் என்பதுதான் அதிசயமாக இருக்கிறது. சிங்கள தேசத்தின் மூலைமுடுக்கெல்லாம் மஹிந்த சிந்தனை என்பது பண்டாயுகத்தின் மறுபிறப்பு என்று சொல்கின்றார்கள். பண்டா யுகம் என்பது என்ன?

பண்டா யுகத்திலே நடந்தது என்ன? பண்டாயுகத்திலே நடந்த துன்பங்கள் எல்லாம் எல்லோருக்கும் நன்றாகத் தெரிநதிருக்கும். பண்டா யுகத்திற்கு போகப் போவதாகக் கூறும் மஹிந்த என்ன சொல்ல வருகிறார் எனில் தனது பொருணமிய கோட்பாட்டுக்கு பண்டா சாயத்தை பூசுகிறார். அது பண்டா சாயமாக,கிராமப்புற சிங்களவர் சாயமாக, அம்பாந்தோட்டை சாயமாக மாறுகிறது.

2வது நிலைப்பாடு அவரது வெளிநாடு தொடர்பான நிலைப்பாடு. அமைதி முயற்சிகளை ஆசிய மயமாக் குவது சாத்தியமா? சிங்களத்தினது வெளிநாட்டு நிலைப் பாடு என்பது எங்களுடைய இனச்சிக்கலை சார்ந்தது தான் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். 1956ஆம் ஆண்டுகளில பண்டாரநாயக்க எவ்வாறு டி.எஸ்.சேனநாயக் காவை ஒரு ஐரோப்பிய மயமான கனவான்போல காட்டி தன்னை தேசியவாதியாக வெளிப்படுத்தினாரோ அதேபோல ரணிலை அதேநிலையில் வைத்துக்கொண்டு சமாதான முயற்சிகள் ஐரோப்பிய மயமாக்கப்பட்டதாக கூறிக் கொண்டு ஆசிய மயமாக்கல் என்ற இல்லாத ஒரு கற்பனையை உருவாக்குகிறார்.ஆசியாவில் அப்படிப் பட்ட ஒருநிலைமையும் இல்லை.அந்த ஒரு நிலைப்பாடு மேற்கொள்ள இங்கே ஒருநாடும் இல்லை. இந்தியாவை எடுத்துக்கொள்ளுங்கள் இந்தியாவின் ஆட்சி முறையானது 3வீதம் அளவுள்ள ஒரு இனம் சார்ந்த ஆட்சி. அந்த இனத் தினது கொள்கைக்காக இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கை எப்போதும் வடிவமைக்கப்பட்டுக்கொண்டு இருக் கிறது. அந்தக் கொள்கையை யாராலும் மாற்றியமைக்க முடியுமென்று நாங்கள் நம்பவில்லை.

இந்தியா தாங்கள் தலையிடாமல் மற்றவர்களை தூண்டி விட்டு தாங்கள் வெளியில் நின்றுகொண்டு இது இப்படித் தான,அது அப்படித்தான் என்று சொல்லிக் கொண்டு குறை களைக் கூறிக்கொண்டு ஒரு முடிவுக்கு வரவிடாமல் தடுப் பதற்கான ஒருதிட்டத்தை நீண்டகால மாக செயற்படுத்தி வருவதை நாங்கள் அறிவோம்.

அண்மையில் ஐரோப்பிய ஒனறியத்திற்கு இந்தியா கோரிக்கை விடுத்தது புலிகளை தடுக்கவேண்டும் என்று. இதன்பொருள் அவர்கள் இங்கே தலையிடப்போவதில்லை என்பதுதான். ஏனெனில் அவர்களுக்கு உண்மை என்னவென்று தெரியும். ஒரு அமைதி முயற்சிக்கு தலையீடு செய்வதென் றால் அவர்களை இரண்டு தரப்பும் முதலில் வரவேற்க வேண்டும். எங்களை தனித் தரப்பாக ஏற்றுக் கொணடு செயறபட இந்தியா முன்வர வேண்டுமென்று ஏற்கனவே நாம் கோரிக்கை விடுத்திருந்தோம்.அதை இந்தியாவால் ஏற்றுக்கொள்ளமுடியாதென்பது இந்த சிங்களத் தலைவர்களுக்கு தெரியாமலிருப்பது மிக புதிரான விடயமாக இருக்கின்றது.அது ஒரு புறமிருக் கட்டும்.சீனாவை இழுப்பதற்காக அங்கே ஜே.வி. பியினர் கதவடைக்கின்றனர்.

சீனாவைப் பற்றி எங்களுக்கு நன்றாகத் தெரியும். இதுபோன்ற வீண் விடயங்களில் சீனா ஒருபோதும் ஈடுபடு வதுகிடையாது. இப்போது மஹிந தவின் கடும் சிந்தனைக்குப் பின்னர் ஜே.வி.பியுடன் கதைத்த பின்னர் ஒரு ஓரவஞ்ச கத்தை செய்கிறார்கள் .அதாவது நோர்வேயைக் கூப்பிட்டுப் பேசி உங்களது நடுவர் முயற் சியைத் தொடருங்கள் என்று கூறி 'தோற்றப்பாட்டை' சிங்களத்திலே உருவாக்கு கிறார்கள். ஆனால் நோர்வேக்கு சொல்லப் பட்டிருக்கின்ற செய்தியைப் பார்த்தால் நோர்வேக்கு சில கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதுபோன்ற தோற்றம் கொடுக் கப்படுகிறது.

இதற்கப்பால் மஹிந்தவின் உள்நாட்டுவிடயங்களைப் பறறி நாங்கள் எதுவும் பேச விரும்பவில்லை.அவர் அதை சிங்கள மயமாக்க,பண்டா மயமாக்க,அம்பாந்தோட்டை மயமாக்க,தன்னுடைய வாழ்க்கைமுறை,சிங்கள மக்களினது வாழ்க்கை முறைபோன்ற கலாசாரம் எனப்பலவற்றை பற்றுப் பேசிவருகிறார்.

ஒருபிரச்சினையைத் தீர்க்க முடியா விட்டால் இன்னொரு பிரச்சினையை தோற்றுவித்து அதன் பக்கமாக மக்களை திசைதிருப்புவது என்பது எளி தான செயல். ஏதோ மஹிந்த புதிதாக பிறப்பெடுத்து வந்தது போலவும் சிக்கலைப் புதிதாக அணுகப்போவது போலவும் இதற்குமுன் மேற்கொள்ளப்பட்ட எந்த அணுகுமுறையையும கணக்கில் எடுக்காமல் அவர் வகுக்கின்ற திட்டங்கள் பாரிய நாசத்தை சிங்கள தேசத்திற்கு விளைவிக்கப் போகிறது. வழமையாக சர்வதேசம் தலையிட்டு ஒரு ஆளும் தரப்புடன் சேர்ந்து திட்டங்களை வகுத்து அமைதி முயற்சிகளூ டாக பொறிகளை உருவாக்கி விடுதலைப் போராட்டங்களை மென்மைப்ப டுத்துகின்ற, அந்த விடயங்களுக்கு அப்பால் இந்த முறை ஒரு புதிய அனுபவத்தை சர்வதேசம் பெறப்போகிறது. நோர்வே பெறப்போகிறது சூடான,பாலஸ்தீனம் போன்ற நாடுகளில் தலையிட்டு பல்வேறு அனுபவங்களைப் பெற்றிருக்கும் நோர்வே என்றும் பெறாத அனுபவத்தைப பெறப்போகிறது .

இந்தமுறை சில நிபந்தனைகளை விதித்துத்தான் அமைதி முயற்சிகளில் ஈடுபடுவோம் என்று நோர்வே சொலலியிருக்கின்றது.நோர்வே நிபந்தனை விதிப்பதை நாங்கள் பெருமகிழ்ச்சியோடு பார்த்திருப்போம். தலைவர் சொன்னது போல சர்வதேசத்தினது கவனம் திசைதிருப்பப் பட்டிருக்கிறது.

ஆகவே தலைவரது சிந்தனை என்பது முற்போக்கான சிந்தனை சர்வதேச நிலைப்பாட்டிற்கு உகந்ததாகவும் அவர்களுக்கு வாய்ப்பு வழங்குவதாகவும் மனித உரிமை மீறல் என்ற அந்த நிலைப்பாட்டிலிருந்து சர்வதேச சமூகம் விலக்கிப் பார்க்கக்கூடிய ஒரு பக்குவமான, நாகரிக மான நிலைப்பாட்டிற்கு எங்களை உட்படுத்தியதால் தான் நாங்கள் தொடர்ந்தும் அமைதி காத்துக்கொண்டிருக் கிறோம்.

இந்தக் காலத்தினது விளைவாக வரக்கூடிய விளை பொருள் என்பது எத்தகையதாக இருக்குமென்பதை நாம சொல்லித்தெரியவேண்டியதில்லை.ஆகவே மஹிந்த சிந்தனை என்பது ஒருநிலைப்பாடு.பிரபாகரன் சிந்தனை என்பது இன்னொரு நிலைப்பாடு. இந்த இரு நிலைப்பாடு களுக்கிடையில் ஒரு புதிய நிலைப்பாட்டை குறுகிய காலத்தில் காண்பதற்கு சர்வதேசத்திற்கு நாங்கள் அவகாசம் வழங்கியிருக்கிறோம் என்பதை விட சிங்களதேசம் வழங்கியிருக்கிறது என்பதே சரியானது என்றார்.(த)

## கதிர்காமர் கொலை வழக்கு; — மற்றுமொரு சந்தேக நபர் கைது

(கொழும்பு)

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷமன் கதிர் காமரின் கொலையுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் மற்றுமொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளின் உளவுப் பிரிவைச் சேர்ந்தவரென சந்தேகிக்கப்படும் இந் நபர் கலேவல மீவெலபதனவில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் வேறொரு வரின பெயரில் நடமாடியமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கலேவெலவிற்கு வருவதற்கு முன்னதாக இவர் வத்த ளையில் இருந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



பறர் தங்கள் மீது காட்டிய விரோதத்தை ஞாபகம் வைத்துக்கொள்ளாமல், அவர்களுடைய நல்ல குணங்களை மட்டும் பார்த்து, அவர்களுடைய கெட்ட குணங்களைப் பாராமல் யார் அவர்கள் மீது விரோதம் கொள்ளாமல் இருக்கிறார்களோ, அவர்கள தாம் உத்தம மனிதர்கள் என்று சொல்லப்படுகி றார்கள்.

சுவாமி விவேகானந்தர்

## அருட்கவி விநாசித்தம்பி ...

பணித்து அதற்காக இறுதிக் காலம் வரை பணியாற்றினார்.

சிறந்த கவிவளம் உடைய அவர் தெய்வீக பாமாலைகளையும் அருட் பாமாலைகளையும் தனது கொடை நூல்களாக தந்துள்ளார். ஆயிரத்திற்கும் மேற்பட்ட திருவூஞ்சல்களை பாடியுள்ள அருட்கவி விநாசித்தம்பி அவர்கள் நடமாடும் தெய்வமாக சைவ மக்களால் போற்றப்பட்டவர்.

நேற்று அதிகாலை ஒரு மணியள வில் இறைநிலை அடைந்த அவரின் திருவுடல் நேற்றுப் பிற்பகல் 3.45 மணியளவில் சமாதி வைக்கப்பட்டது.

கடந்த 10 வருடங்களுக்கு முன்னர் அருட்கவியினால் தனக்கென கட்டப்பட்ட இடத்திலேயே சமாதி வைக்கப்பட்டது. முன்னதாக அருட்கவியின் இறைபத உரை பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் நடைபெற்றது.

இதில் பேராசிரியர் அ.சண்முகதாஸ்,ஆசிரியர் ஆறு திருமுருகன் உட்பட பலரும் உரையாற்றினர். (ந)


## நாராயணன் திருவடியில் நண்ணும் சாந்தி



திருவளரும் அளவெட்டி செழிக்கத் தோன்றி
ஸ்ரீநாக வரத நாராய ணனின்
திருவடியுன் சென்னிவைக்கும் சிறப்புப் பெற்றே
திகழு *விநா சித்தம்பி* ஐயா வாழ்வில்
பெருதுயருற் றுனைநாடி வருவோர் துயரம்
பெருகுமருள் வாக்காலே போக்கும் தெய்வம்
அருளொழுகு நாராயணன் திருவடியின் கீழே
ஐயாவே நீர் அடைக என்றும் சாந்தி

க.கு.கந்தையாபிள்ளை & சன், (k.k.k).
க.சிவபாலன்,
*களபூமி, காரைநகர்.*

(202)


## காவலுக்கு நின்ற ...

பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் நடைபெற்ற இடத்திற்குச் சென்ற வவுனியா மாவட்ட நீதிபதி எம். இளஞ்செழியன் விடுதியில் சிகிச்சை பெற்று வரும் ஏனைய நோயாளிகளையும் வைத்திய சாலை ஊழியர்களையும் உடன் காவலுக்கு இருந்த பொலிஸாரையும் விசாரணை செய்து விபரங்களை பதிவு செய்து கொண்டார்.

கொல்லப்பட்ட பொலிஸ் கான்ஸ் டபிளின் சடலத்தை மருத்துவபரிசோதனைக்கு உட்படுத்தவும் வைத்தியசாலைப் பணிப் பாளருக்கு உத்தரவிட்ட நீதிபதி மேல்விசாரணைகளை நடத்தும்படியும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ந-4)

## யுத்த நிறுத்த..

ஆகியவற்றின் வலுமிக்க தூண்டுதல் களினால் மேற்கொள்ளப்படுவதாக நம்பப்படுகிறது.

தற்போதைய கண்காணிப்புக் குழுவினர் பக்கச்சார்பாக செயற்பட்டுவருவதாக இக் கட்சிகள் குற்றம் சுமத்தி வருகின்றன. இத்தகைய மாற்றம் அநேகமாக எதிர்வரும் மாதம் அளவில் நடைமுறைக்கு வரலாம் என்று அறியப்படுகிறது. (ந)

## தோப்பூரில்...

புலிகளின் உறுப்பினர் களுடன் இரு தரப்பு பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்து தருவதாக முஸ்லிம் பிரமுகர்களிடம் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் உறுதி யளித்துள்ளனர். (ந-4)

# சமாதானப் பேச்சை...

கடந்த ஒரு வார காலமாக இலங்கையில் தங்கியுள்ள அகாஷி ஜனாதிபதியுடனும் ஏனைய அரசியல் கட்சியுடனும் சமாதான முயற்சிகளின் எதிர்காலம் குறித்து விரிவான பேச்சுக்களை நடத்தினார்.

தனது விஜயத்தின் இறுதியில் நேற்று மாலை ஊடகவியலாளர்களை அவர் சந்தித்தார். இச்சந்திப்பில் உரையாற்றும் போதே அகாசி இதனை தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளுடன் நேரடிப் பேச்சு வார்த்தைகளை இலங்கைக்கு வெளியில் நடத்த அரசாங்கம் தயாராக உள்ளதனை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ என்னிடம் தெரிவித்தார்.

அதுவும் ஆசிய நாடு ஒன்றிலே இப் பேச்சுக்களை நடத்த அரசு விரும்புவதாகவும் அவர் கூறினார். அவ்வாறாயின் நேரடிப்பேச்சுக்களை யப்பானில் நடத்தவும் அதற்கு தேவையான ஏற்பாடுகளைச் செய்யவும் யப்பான் அரசு தயாராகவுள்ளது.

இரு தரப்பும் இதனை ஏற்றுக் கொண்டால் நோர்வேயின் அனுசரணையுடனும் கண்காணிப்புக் குழுவினரது அவசியமான பிரசன்னத்துடனும் பேச்சுக்களை ஜப்பானில நடத்த தயாராகவுள்ளோம்

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள வன்முறைச் சம்பவங்கள் எதிர்பாராத விளைவுகளை ஏற்படுத்தகூடிய அபாயம் மிக்கது.

எதிர்வரும் 19 ஆம்திகதி பிரசஸ்ஸில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் நான்கு இணைத் தலைமை நாடுகள் சந்திக்கவிருக்கின்றன.

முக்கியமான இச் சந்திப்பின்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்தும் சமாதானம் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் அதன் அடிப்படைகள் குறித்தும் விரிவாக ஆராயப்படவுள்ளது.

சமாதான முயற்சியில் நாம் ஒருவகையான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருப்பு முனையைச் சந்தித்திருக்கின்றோம். இணைத் தலைமை நாடுகள் இது குறித்து ஆராய்ந்து ,எதிர்காலத்தில் எவ்வாறு பயனுள்ள வகையில் இலங்கைக்கு உதவ முடியும் என்பது பற்றி அங்கு தீர்மானிப்போம் என அகாஷி தெரிவித்தார்.

இலங்கை அரசு தற்போது மிகவும் நுணுக்கமான முறையில் சமாதான முயற்சிகள் குறித்தும் ,அதன் எதிர்கால அணுகுமுறை குறித்தும் விரிவாக ஆராய்ந்து வருகின்றது.

இவ்வாராய்வு விடுதலைப்புலிகளுடனான தொடர்பு,நோர்வேயின் அனுசரணைப்பணி என்பன உள்ளடக்கப்பட்டுள்ளது. அரசு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு குறித்தும் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது.

நோர்வேயைப் பொறுத்தவரை அது மிகவும் நேர்த்தியான அனுசரணைப் பணியினை வழங்கி வருவதாக ஜப்பான் கருதுகின்றது. அதற்கு எப்போதும் இணைத் தலைமை நாடுகளினதும்,யப்பானினதும் முழு ஆதரவு உண்டு என அவர் மேலும் தெரிவித்தார். (ந-4)


## மரண அறிவித்தல்



## அமரர் வே.செல்லத்தம்பி

### (முன்னாள் லிகிதர் கச்சேரி) (கரவெட்டி மேற்கு)

புத்தூர் மணற்பகுதியை பிறப்பிடமாகவும் கரவெட்டி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை செல்லத்தம்பி அவர்கள் 7.12.2005 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை கதிராசி அவர்களின் அன்பு மகனும் வசந்தாதேவியின் அன்புக் கணவரும் சரஸ்வதி, இளையகுட்டி (ஓய்வு பெற்ற ஆசிரியர்) ஆகியோரின் சகோதரனும் கஜேந்திரன் (டென்மார்க்), சுரேந்திரன் (HTO), கதிர்விழி (அவுஸ்திரேலியா), ஜெயேந்திரன், ரூபேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சொர்ணமலர் (டென்மார்க்) ,வெண்ணிலா, குகச்சந்திரன்(அவுஸ்திரேலியா), ஆகியோரின் மாமனாரும்,சுரோமியா, சுரோமியன், சுபிஸ்திகா, பவானிசன், குகானிசன், குகானிஷி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 07.12.2005 புதன்கிழமை நடைபெற்று தகனக்கிரிகைக்காக கிராய் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கலட்டி வீதி,
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

(c-010)

தகவ
செ.சுரேந்திரன்(மகன்)



இன்று
O/L-2005
பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்
DMI
Jaffna
(c-011)

மனோகரா யாழ்.
யாழ். நகரில் முதன்முறையாக
DIGITAL dts SOUND ஒலிநயத்துடன்
காலை 10.30 இற்கு இளைய தளபதி விஜய், அசின் நடித்த சிவகாசி
1.30, 4.30, 7.30, 10.30 காட்சியாக
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக
சூர்யா, திரிஷா, வடிவேல் நடித்த ஆறு
புதிய காட்சிநேரம்: காலை 10.30, மதியம் 1.30 மாலை 4.30, இரவு 7.30,10.30 (புதியநேரம்)

நிறைஞ்சனாஸ்
சங்கானை
விக்ரம், அஸின், வடிவேலு நடித்த மஜா



கா.நே: 11.00,2.45,6.00 (பு.நே)
*12.12.2005* முதல்
*International Super Star hero tomcruist in*
War of the world
கா.நே :11.00, 2.45, 6.00

நாதன்ஸ் சினிமா
யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
ஷாம், சினேகா, அபர்ணா நடித்த



ஏபிசிடி
கா.நே10.30, 1.30,4.30,இரவு7.30 (பு.நே)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.12.2005 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.